விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 09 | சனிக்கிழமை (22.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 34



உலங்கு வானூர்தி மூலம் நேற்று கிளிநொச்சி வந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தையும் அவரது பாரியாரையும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் வரவேற்று அழைத்துச் செல்வதை படங்களில் காணலாம்.

# தலைவர் பிரபா-அன்ரன் பாலசிங்கம் நேற்றுச் சந்தித்து மந்திராலோசனை

## நோர்வேக் குழுவினருடன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேற்று மதியம் சந்தித்து முக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டார்.**

**இக் கலந்துரையாடலின்போது சுனாமி கடல் அனர்த்தத்தினால் தமிழீழப் பிரதேசங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் எதிர்கால சமாதான நடைமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.**



நேற்றுக் காலை 9மணியளவில் கொழும்பை வந்தடைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அவரது பாரியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் கட்டுநாயக்க [illegible]மான நிலையத்திலிருந்து உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை சென்றடைந்தனர் [illegible]னர் தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்த அன்ரன் பாலசிங்கம் அவருடன் மந்திராலோசனையில் ஈடுபட்டார்.

சுனாமி பேரலையால் தமிழர் தாயகப் பகுதிகள் எதிர்கொண்ட அழிவுகள் அதற்கென அரச அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட உதவிகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடியதோடு சமாதான முயற்சிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முன்னேற்றகரமான (14 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் சென்ற ஹெலி அனுராதபுரத்தில் தரையிறங்கியது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் காலை 9 மணியளவில் இலங்கை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியாரும் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி நோக்கிப் பயணமாகினர்.

அதன்போது சீரற்ற காலநிலை காரணமாக அவர்கள் பயணம் செய்த உலங்கு வானூர்தி அனுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டதாக விமானப் படையின் ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் அஜந்த சில்வா தெரிவித்தார்.

சிறிது நேரத்தின் பின் காலநிலை சீரடைந்ததால் குறிப்பிட்ட உலங்கு வானூர்தி கிளிநொச்சியை நோக்கிப் புறப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச சமூகத்தின் உதவிகள் தமிழ்மக்களை சென்றடையவில்லை

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கவலை

(கிளிநொச்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வ[தே]ச சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்ட உதவிகளை அரசு தமிழர் தாயகப் பிரதேச மக்களுக்கு சமமாக பங்கிடத் தவறிவிட்டது. இது குறித்து நாம் கவலையடைந்துள்ளோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

உலங்கு வானூர்தி மூலம் நேற்று கிளிநொச்சி சென்றடைந்த அவர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நோர்வேயுடனான இன்றைய சந்திப்புக் குறித்து அவருடன் கேட்டபோது தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் இன்று முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

அதற்கு முன்னர் குறிப்பிடத் (14 ஆம் பக்கம் பார்க்க)

## புனரமைப்புப் பணிகள் யாவும் அடுத்த வாரம் பூர்த்தியாகும்

### அமெ. கடற்படை அதிகாரி ஸ்றாங்கே பாண்டர்

(கொழும்பு)

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாம் மேற்கொண்டுவரும் நிவாரண புனரமைப்பு நடவடிக்கைகளை அடுத்த சில வாரங்களுக்குள் நிறைவு செய்ய முடியுமென அமெரிக்க கடற்படை கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் ஸ்றாங்கேபாண்டர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தினர் இலங்கையில் மேற்கொண்டுவரும் நிவாரண நடவடிக்கைகள் பெரும்பாலானவை பூர்த்தியடைந்துள்ளதாக அவர்கூறினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிர (14 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் நேற்று ஜனாதிபதியுடன் பேச்சு

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வேத் தரப்பினர் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகாவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு இலங்கை வந்தடைந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றசன், நோர்வே தூதரக அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் நோர்வேத் தரப்பில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றசன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம், சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்ட் செவ். ஜோன்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு நோர்வே தனது உதவியினை தொடர்ந்து வழங்கும் என நோர்வேக் குழுவினர் ஜனாதிபதிக்கு உறுதியளித்தனர்.

இதேவேளை நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப சகல தரப்பினரும் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஜான் பீற்றசன் பாராட்டுத் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய திட்டங்களுக்கமைய உதவி வழங்கும் நாடுகள் ஒன்றிணைய வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். (14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மயக்க மருந்து சித்திரவதைக்கு பின்னரே வீரப்பன் கொலை

## உண்மை அறியும் குழுவின் திடுக்கிடும் அறிக்கை

வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் ஒரு அதிரடிப்படை வீரரின் மனைவியின் துணையோடு ஒரு வீட்டுக்கு வரவழைத்து, மோரில மயக்க மருந்து கலந்து கொடுத்து, பின்னா் சித்திரவதை செய்தே பொலிஸார் கொன்றுள்ளதாக உண்மை அறியும் குழுவினர் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளனர்.

சந்தனக்கடத்தல் வீரப்பன் அவனது கூட்டாளிகள் 3 பேர் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தர்மபுரி பாடி அருகே உள்ள காட்டுப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்



பட்டனர். வீரப்பன் கும்பலுடன் நடந்த மோதலின்போது அவர்கள் சுட்டுக் கொல்லப்படடதாக அதிரடிப்படைத் தலைவர் விஜயகுமார் கூறினார்.

உண்மையில் வீரப்பன் எப்படி கொல்லப்பட்டான் என்பதை விசாரிக்க 10 தன்னார்வ நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை பிரதிநிதிகளாகக் கொண்ட உண்மை அறியும குழுவொனறு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்ட பாடி கிராமம், அவனது சொந்த ஊரான கோபிநத்தம்,வீரப்பன் மனைவி முத்துலட்சுமியின் ஊர் உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று நேரடியாக நூற்றுக்கணக்கானவர்களிடம் விசாரணை நடத்தியது.

இந்த விசாரணையின் முடிவை குழுவின் தலைவர் பேராசிரியர் ராமசாமி செய்தியாளர்களிடம் தொிவிததார் "பொலிஸாருடன் நடந்த மோதலில் வீரப்பனும், கூட்டாளிகளும் கொல்லப்படவில்லை. பொலிஸ உளவுப்பிரிவைச் சேர்ந்த ஒருவரின மனைவி, வீரப்பனின் நட்பைப் பெற்று அவனது நம்பிக்கையைப் பெற்றுள்ளார். இதைப் பயன்படுத்தி வீரப்பனையும். அவனது கூட்டாளிகளையும் அக்டோபர் 18ஆம் திகதிக்கு (அன்றுதான் வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது) இரண்டு நாட்களுக்கு முன் கோபிநத்தத்தில உள்ள தனது வீட்டுக்கு அந்தப் பெண் வரவழைத்துள்ளார்.

அவர்களுக்கு சாப்பிட மோர் கொடுத்துள்ளார். அந்த மோரில் மயக்கமருந்து கலந்திருக்க வேண்டும். மோரை சாப்பிட்ட வீரப்பனும், கூட்டாளிகளும் மயங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து அவர்களைஅதிரடிப் படையினர்தங்களது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

பின்னர் வீரப்பன் மற்றும் கூட்டாளிகளுக்கு மயக்கம் தெளிந்தவுடன் அவர்களை அதிரடிப் படையினா சித்திரவதைப்படுத்தியுள்ளனர். இரண்டு நாட்கள் வரை பொலிஸ் காவலில் சித்திரவதை செய்யப்பட்டு வரப்பனும் அவனது கும்பலும் கொல்லப்பட்டனர்.

இது என்கவுண்டரே இல்லை. சுத்தமான கொலை. சித்திரவதைப் படுத்தி, கொலை செய்துள்ளனர். வீரப்பனின் நெற்றியில் ஏற்பட்ட பெரியகாயம் அவன் சாவதற்கு 10 முதல் 12 மணி நேரத்திற்கு முன் பேஏற்பட்டிருக்க வேண்டும். வீரப்பனின் பிரேதப் பரிசோதனை அறிக்கையில், அவனது உடலில் 3 குண்டுக்காயங்களும், பல் வெளிக் காயங்களும் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த வெளிக்காயங்கள் எதனால் ஏற்பட்டன என்பது குறித்து ஏதும் சொல்லப்படவில்லை. இது எங்களது சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவதாக உள்ளது என்றார் ராமசாமி. அவர் தொடர்ந்து கூறுகையில், வீரப்பன் மற்றும் அவனது கூட்டாளிகள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு முழுமையாக விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்றார்.

பேட்டியின் போது உடனிருந்த வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கூறுகையில்,

அதிரடிப்படையினர் என்னை தொடர்ந்து மிரட்டி வருகிறார்கள். என் மீது 17 கைது வாரண்ட்டுகள் நிலுவையில் இருப்பதாகவும், வீரப்பன் சாவு குறித்து தொடர்ந்து பிரச்சினை கிளப்பினால் வீரப்பனுக்கு ஏற்பட்டகதிதான் உனக்கும் என்று கூறிவருகிறார்கள். இதனால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.என் கணவர் பிடிபட்டிருந்தால் அதிரடிப்படையில் பலர் இறந்திருப்பார்கள் அந்த வேனில் துப்பாக்கிச் சண்டை நடந்த மாதிரி தெரியவில்லை. வேனில் ரத்தக் கறையே இல்லை.

என் கணவர் இறந்த 10 நாட்கள் கழித்து, ராமலிங்கம் என்ற இன்ஸ்பெக்டர்என்னை சந்தித்தார். மேட்டூரில் இருந்த அவர் பின்பு டெல்லிக்கு மாற்றப்பட்டார். அவர் என்னிடம்,உன் மீது கர்நாடகத்தில் 17 வாரண்ட்டுகள் இருக்கிறது. அதைவைத்து உன்னை கைது செய்துவிடுவோம்.

வீரப்பனின் உடலுக்கு மறு பிரேத பிரிசோதனை கேட்காதே. மனித உரிமைக்குழுவிடம் போக வேண்டாம் . நீயும் உன் குழந்தைகளும் நல்லா இருக்க வேண்டும் என்றால் நீ அமைதியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் உனக்கு தமிழக அரசு வீடு தரும் என்று கூறினார்.

அதற்கு என் கணவர் சுட்டுக் கொல்லப்பட்டாரா, இல்லை பிடித்து வைத்து கொல்லப்பட்டாரா என்பது தெரியாமல் நான் விடமாட்டேன். உங்களது பேரத்துக்கும் அடி



பணிய மாட்டேன் என்று கூறினேன்.

அவர் 3 நாட்கள் கழித்து மீண்டும் வந்து உன்னையும் கொலைசெய்ய அதிரடிப்படை திட்டம் தீட்டியுள்ளது. வீரப்பனைக் கொல்வதற்கு முன்பே உன்னை தனியாக அழைத்து கொலை செய்யும்படி என்னிடம் அதிகாரிகள் கூறினர். நான்தான் மறுத்து விட்டேன் என்று கூறினார்.

இதனால் எனக்கு எந்த நேரத்திலும் அதிரடிப்படையினரால் ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. என்னிடம் இருந்து பறித்த பொருட்களை திருப்பதித்தர மறுக்கின்றனர். எஸ்.பி. அசோக்குமாரிடம் பொருட்களை தருமாறு கேட்ட போது, நீதிமன்றத்துக்குப் போகாதே என்று மிரட்டினார்.


கோவையில் என்னை பிரியா வீட்டில் தங்கவைத்தனர். அந்த வீடு முழுவதும் கேமரா பொருத்தப்பட்டிருந்தது பின்னர் தான் எனக்குத் தெரிந்தது. என்னை எப்படியெல்லாமோ படம் எடுத் திருக்கவாய்ப்பிருக்கிறது. அதை வைத்து கூட என்னை மிரட்ட அவர்கள் முயற்சிக்கலாம்.

எனது பெயரில் வங்கியில் ரூ.3 லட்சம் இருக்கிறது. கிரேன் ஒன்றை வாடகைக்கு விட்டிருக்கிறேன். மாதம் ரூ50,000 வாடகை தரும் கிரேனை பொலிஸார் கைப்பற்றி, வெறும் ரூ8,000தான் தருகின்றனர்.

இதுதவிர 3 சவரன் நகை, ஸ்கூட்டி மோட்டார் சைக்கிள் ஆகியவையும் பொலிஸாரிடம் உள்ளது. இவற்றை பொலிஸார் திருப்பித்தரவேண்டும் என்றார். (து)

## தொடரும் கோவில் படுகொலைகள்

# காஞ்சி உத்திராஜமட மேலாளர் படுகொலை



காஞ்சிபுரத்தில் 150 ஆண்டுகளாக இருந்து வரும் உத்திராஜ மடத்தின் நிர்வாகி ஸ்ரீனிவாச ஆச்சாரி மடத்திலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட உத்திராஜ மடத்தின் நிர்வாகியாக இருந்த 40 வயதான ஸ்ரீனிவாச ஆச்சாரியின்உடல் ரத்த வெள்ளத்தில் கடந்ததை நேற்று முன்தினம் காலை மடத்திற்கு வந்த பால்காரர் ஒருவர் பார்த்து காவல்துறைக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்திற்குவந்த காவல்துறையினர் நேற்று முன்தினமிரவு 2 மணியளவில் ஸ்ரீனிவாசஆச்சாரி , கொல்லப்பட்டிருககலாம் என்றுகூறினர்.

கடந்த செப்டெம்பர் மாதம் படுகொலை செய்யப்பட்ட சங்கரராமன் பணியாற்றி வந்த வரதராஜப் பெருமாள் கோயிலின் பின்புறம்தான் இந்த உத்திராஜ மடம் அமைந்து உள்ளது.

மேலும் சங்கரராமனை படுகொலை செய்தது போலவே, ஸ்ரீனிவாச ஆச்சாரியும் தலையில் அடித்து கொல்லப்பட்டுள்ளார்.


ஸ்ரீனிவாச ஆச்சாரி நேற்று முன்தினம் உத்திராஜா மடத்தின் ஸ்ரீபெரும்பூத்தூர் கிளை நிர்வா்கியுடன் ஆலோசனை நடத்திவிட்டு உறங்கச் சென்றுள்ளார்.

அவர் வராண்டாவிலும் படுத்து உறங்கும்போது இந்த படுகொலை நிகழ்ந்துள்ளது. இந்த படுகொலை குறித்து விசாரித்து கொலையாளிகளை பிடிப்பதற்கு சிறப்பு காவல் துறை குழு அமைக்கப்படும் என்றும காவல்துறையினர் தெரிவித்தனர்.

உத்திராஜா மடம் காஞ்சியில் உள்ள புகழ்பெற்ற மடங்களில் ஒன்றாகும். இங்கு வட இந்தியாவில் இருந்து ஏராளமான யாத்திரிகர் வந்து செல்வர் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். உத்திராஜ மடத்திற்கு பல்வேறு இடங்களில் ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பாக பல நேரங்களில் தகராறுகள் ஏற்பட்டுள்ளன என்றும், பலமுறை காவல்துறையின் தலையீடு கோரபட்டுள்ளது என்றும் அம்மடததோடு தொடர்புடையவர்கள் தெரி விக்கின்றனர்.

காஞ்சிபுரம் உத்திராதி மட நிர்வாகி ஸ்ரீனிவாச ஆச்சாரியை படுகொலை செய்த கொலையாளிகள் அடையாளம் தெரிந்தது என்றும் இன்னும் சில நாட்களில் பிடிபட்டு விடுவார்கள் என்றும் காவல் கண்காணிப்பாளர் பிரேம்குமார் கூறியுள்ளார்!

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாவட்ட காவல கண்காணிப்பாளரும், சங்கரராமன்



படுகொலை வழக்கை புலனாய்வு செய்துவரும் காவல் குழுவின் தலைவருமான பிரேம்குமார், கொலையாளிகளை பிடிக்க கோயம்பேடு ஆய்வாளர் ஸ்ரீனிவாசன், காஞ்சிபுரம் ஆய்வாளர் மோகன வேலு, ஸ்ரீபெரும்புத்தூர் ஆய்வாளர் ரவிகுமார் ஆகியோர் தலைமையில் 3 சிறப்புப்படைகள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

(து)

## நியூஸிலாந்தில் பூமி அதிர்வு

(கொழும்பு)

நியூசிலாந்து வெலின்றனில் நேற்று பூமி அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இதன் போது 5.5 ரிச்சட் அளவிலான அதிர்வு உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடலுக்கடியில் சுமார் 30 கிலோ மீற்றா ஆழத்தில் இந்தப் பூமியதிர்வு ஏற்பட்டுள்ளது.

எனினும் உயிரிழப்புக்கள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

(க-9)

## பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி வருமான மேர்பார்வையாளர் பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்கு வலி தெற்கு / மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு சம்மேளனத்தின் வடக்கு கிழக்கு இணைப்பாளர் செ.சந்திரகுமார் தலைமையில் இது நடைபெறவுள்ளது. (ப-95)

## தொடர்பு கொள்க

(துன்னாலை)

மந்திகை மருத்துவமனையின் பணிபுரியும் சர்வதேச மருத்துவக் குழுவினருக்கு தமிழ் மொழி தெரியாததால் நோயாளிகளுடன் உரையாட முடியவில்லை.

இதற்கு தொணடு அடிப்படையில சேவை புரியக்கூடிய மொழிபெயர்ப்பு திறமையுடையோர் உடன் தொடர்பு கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ப-101)

## மலைப்பிரதேசங்களில் மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

மத்திய மலைப்பிரதேசங்களிலும் அவற்றை சார்ந்த பிரதேசங்களிலும், மண்சரிவு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது என புவிசரிதவியல் சுரங்கப் பணியகம் எச்சரித்துள்ளது.

பூமி அமைந்துள்ள நிலத்தட்டில் அடிக்கடி அதிர்வுகள் ஏற்படுவதால உறுதியற்ற மலைச்சரிவுகள் மேலும் ஸ்திரத்தன்மை குறைவையாக மாறி வருவதே இதற்கு காரணமாகும் என பணியகத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர். (க-60)

## கும்பாபிஷேகம்

(பொன்னாலை)

நுணாவில் மத்தி - கந்தசுவாமி தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்னதாக 26ஆம் திகதி புதனகிமை காலை முதல் பிற்பகல் வரை எண்ணெய் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

(ப-47)

## சொந்த இடத்தில் இயங்குகிறது

(பொன்னாலை)

கடற்கொந்தளிப்பினால் சேதமடைந்து, பளை தபால் நிலையத்தில் இயங்கி வந்த தாளையடி உப-தபால் நிலையம் மீண்டும் பழைய இடத்தில் கடந்த 19ஆம் திகதி முதல் இயங்கி வருகின்றது.

கடற்கொந்தளிப்பில் தாளையடி உபதபால் நிலையமும் அங்கிருந்த அலுவலகமும் முற்றாக சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-49)

## சங்காபிஷேகம்

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் - வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தில் சகஸ்ர சங்காபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றது. (ப-49)

# ஆலயங்களுக்கு நிதி உதவிகளை வழங்காதிருக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் இணக்கம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தகவல்

(தென்மராட்சி)

**நாம் அனைவரும் ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் இருப்பதன் மூலம் தான் தமிழ்த்தேசியத்தின் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். இன்றைய காலகட்டத்தில் மிகவும் அத்தியாவசியமாகக் கருதப்படுவது இது ஒன்றேதான்.**


இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைபின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கடந்த புதன்கிழமை கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட உபகரணங்கள் தளபாடங்கள் வழங்கல் வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரையாறறும் போது தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் கே.என்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டிருந்தார். பாராளுமன்ற உறுப்பனர் ரவிராஜ் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

யாழ்ப்பாண மாவட்டத்தின் கரையோரப் பகுதியில் இடம் பெற்ற சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாம் எம்மால் முடிந்தளவு உதவிகளையும் மன ஆற்றுப்படுத்தல் பணிகளையும் செய்யவேண்டும். வெளிநாடுகளில் வாழ்கின்ற உறவினர்களிடம் நிதியுதவிகளைப் பெற்று எமது கிராமிய அமைப்புக்களைப் பலப்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆலயங்கள், பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் சனசமூக நிலையங்கள் போன்றவையே பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இதில், ஆலயங்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்வதில்லை என நாம் கொள்கை அளவில் ஒருமித்து உள்ளோம்.

எமக்கு ஆலயங்கள் அவசியம் வேண்டும். ஆயினும் அவற்றினைப் பராமரிக்க, கிராமிய மட்டத்தவர்கள் தான் நிதிப்பங்களிப்புச் செய்யவேண்டும். கோடிக்கணக்கில் செலவிட்டு ஆலய புனருத்தாரணப் பணிகளைச் செய்யும் எம்மவர்கள் ஒரு சில ஆயிரம் ரூபாய்களைக் கூட அங்கு இருக்கக் கூடிய முன்பள்ளிகளுக்கோ அல்லது சனசமூக நிலையங்களுக்கோ உதவுவது இல்லை. இந்த நிலை ஆரோக்கியமானதல்ல எனக் குறிப்பிட்டார்.



இந் நிகழ்வில் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களில் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் நூல்கள் கிராமிய மட்ட அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## சுனாமியின் தாக்கம்

## வருமானமின்றி அல்லற்படும் எட்டு இலட்சம் இலங்கையர்!

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் கொடூரத்திற்கு கிட்டத்தட்ட எட்டு இலட்சம் இலங்கையர்கள் தங்கள் வேலை வாய்ப்பினை இழந்துள்ளதுடன் எதுவித வருமானமும் இன்றி வாழ்ந்து வருகின்றனர் என சர்வதேச தொழிலாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

மீள்கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்துவதன் மூலம், வேலை வாய்ப்பினை அதிகரித்து அதுவரை காலமும் அவர்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை அரசு செய்ய வேண்டும் எனவும் அவ் அமைப்புக் கேட்டுள்ளது.

பல்வேறு துறைகளிலும் பல தரப்பட்ட அழிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் வறுமைக் கோட்டுக்குள் வாழ்கின்ற கரையோரப் பகுதி மக்களே. அவர்கள் தங்களது வருமானத்தினை மட்டுமன்றி, கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த சொத்துக்களையும் ஒரு நொடியில் இழந்துள்ளனர் எனவும் அவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த், தங்கள் அமைப்பு உலக வங்கியுடனும், ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் இணைந்து பணியாற்ற இருப்பதாகவும் அது தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (ற-4)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்குவதற்கென இராணுவத்தினர் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல்கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு யாழ்.மாவட்ட இராணுவத்தினர் உபகரணப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய இலங்கை இராணுவத்தின் ஆகாய நகர்வு படை மீள் நிரப்பும் படையணித் தலைமையகத்தின் கட்டளையிடும் அதிகாரி கேணல் ஜி.ரி.டி.யு.ஏ.பெரேரா மற்றும் அப்படையணியைச் சேர்ந்த அதிகாரிகள், சிப்பாய்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி மிக்க பாடசாலை உபகரணங்களும், பாடப் புத்தகங்களும் நேற்றுமுன்தினம் காலை யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஸிடம் யாழ்.அரச அதிபர் பணிமனையில் வைத்துக் கையளிக்கப் பட்டன.

சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் பாடசாலை உபகரணங்கள் யாவும் கடல் கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்களின் தேவைக்குப் பெற்றுக்கொடுக்கப் படுமென அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த உபகரணங்களை கையளிக்கும நிகழ்வில் ஆகாய நகர்வுப் படை மீள் நிரப்பும் படையணியின் கட்டளையிடும் அதிகாரியின் சார்பாக அப்படையணியின் உயர் அதிகாரியான மேஜர் எம்.என்.கே. ஜயசுந்தர கலந்துகொண்டார். (ற)

## விசனம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் மின்சாரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கு மின் விநியோகிப்பதற்கென மின் கம்பங்கள் பறிக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் மின்சாரம் வழங்குவதற்கு நடடிக்கை மேற்கொள்ளப் படவில்லை.

இதனால், விண்ணப்பதாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ப-79)

## திடீர் பரிசோதனைகளின் மூலம் யாழில்

## சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத வாகனங்கள் இனங்காணப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத வாகனங்களைக் கண்டுபிடிப்பதற்காக திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்பரிசோதனை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத வாகனங்கள் புழக்கத்தில் உள்ளன.

அதாவது, சமிக்ஞை விளக்குகள் (சிக்னல்), மின்விளக்கு, ஒலிபரப்பாக்கி, பிறேக் போன்றன பொருத்தப்படாமல் யாழ்.மாவட்டத்தில் பல வாகனங்கள் பாவனையில் உள்ளன.

இதனால், வீதி விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதுடன், இவ்வாறான வாகனங்களில் பயணம் செய்யும் பொதுமக்களும் பல்வேறு இடையூறுகளுக்குள்ளாகி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத வாகனங்கள் இனஙகாணப்பட்டால் வாகன சாரதி மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (ற-19)

## இந்த ரொபி போதுமா இன்னுமொன்று வேணுமா?

(மன்னார்)

கொழும்பிலிருந்து தனியார் பஸ்ஸில் மன்னாருக்குச் சென்ற பேசாலை இளைஞர் ஒருவர், அதே பஸ்ஸில் பயணம் செய்த மோசடி ஜோடியொன்று வழங்கிய டொபியை சாப்பிட்டதால் தன்னிடமிருந்த பணம் மற்றும் உடைமைகளைப் பறிகொடுத்த சம்பவமொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து மன்னாருக்குச் செல்லும் காலை நேர பஸ் வண்டியில் ஏறிய இளைஞரிடம் அருகில் அமர்ந்த ஒருவர் தமிழில் உரையாடி நட்புடன் பழகியுள்ளார். வழியில் மதிய உணவிற்காக பஸ் நிறுத்தப்பட்டது. அப்போது அந்த நபர் தன்னுடைய செலவில் இளைஞருக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்துள்ளார்.

மீண்டும் பஸ் புறப்பட்டதும் பஸ்ஸில் நின்று கொண்டு வந்த யுவதியொருவர் அந்த நபரைப் பார்த்துச் சிரித்துள்ளார். அவரும் திரும்பி புன்னகைத்துள்ளார். இதனையடுத்து, குறிப்பிட்ட இளைஞரிடம் அவர் ரொபி ஒன்றைக் கொடுத்துள்ளார். ரொபியை வாங்கி வாயில் போட்டுக்கொண்ட இளைஞர் யுவதியைப் பார்த்துச் சிரித்துள்ளார்.

டொபியை சாப்பிட்ட இளைஞனுக்கு ஏதோவொரு மோகம் அதிகரித்துள்ளது. அப்போது அந்த மோசடி நபரும் யுவதியும் ஏதோ பேசிக் கொண்ட பின்னர் குறிப்பிட்ட நபரும் யுவதியும் இளைஞரை அழைத்து அனுராதபுரத்துக்கு அண்மித்த இடத்தில் இறக்கியுள்ளனர்.

மூவருமாக ஆள் நடமாட்டம் குறைநத ஒழுங்கையொன்றுக்குள் சென்றனர். யுவதிக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று அந்த நபர் இளைஞரிடம் கேட்டுள்ளார். இதனையடுத்து, இளைஞரை வற்புறுத்தியும் அச்சுறுத்தியும் அவரிடமிருந்து 5,250 ரூபா பணத்தையும் கையடக்கத் தொலைபேசியையும் பறித்தெடுத்துக் கொண்டு தப்பி ஓடும்படி கூறியுள்ளார்.

அப்போது அருகில் நின்ற யுவதி, இன்னும் ஒரு ரொபி தரட்டுமா என்று கேட்டுள்ளார். இளைஞரோ கெஞ்சி மன்றாடி 150 ரூபாவை வாங்கிக் கொண்டு அனுராதபுரம் வரை நடந்து சென்று தப்பினோம் பிழைத்தோம் என்று பஸ்ஸில் ஏறி வவுனியா வந்து மன்னார் சென்றுள்ளார். (ப)

## எமது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு தொழிற் பயிற்சிகளைப் பெறுவது அவசியம்

### தொழிற் பயிற்சி அதிகார சபை இணைப்பாளர் இளையோர்க்கு அறிவுரை

(சாவகச்சேரி)

போரினாலும் இயற்கை அனர்தங்களாலும் பாதிக்கப்பட்டு நலிவுற்றிருக்கும் எமது சமுதாயத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு இளைஞர், யுவதிகள் ஏதாவது தொழில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவது வீட்டுக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நன்மைபயக்கும் என்று சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்ட தொழில் பயிற்சியின் ஆரம்ப வைபவத்தில் தலைமை உரையாற்றிய தொழில்பயிற்சி அதிகார சபைகள் பிராந்திய இணைப்பாளர் பி.பாலசுப்பிரமணியம் அழைப்பு விடுத்தார்.

சாவகச்சேரி நகரசபை செயலாளர் குணமணிதேவி ஆறுமுகம் இந்நிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்க பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் பயிற்சி நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

அங்கு தொடர்ந்து பி.பாலசுப்பிரமணியம்,

இப் பயிற்சி நிலையத்தின் நடவடிக்கைகள் மூலம் மக்களிடையே சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதே எம் நோக்கம். அதற்கான வங்கிக்கடன் உறுதிகள் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் 450 ரூபா உதவிப்பணமாக மாதாந்தம் வழங்கப்படும்.

தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு பருவகாலச்சீட்டு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் 6 மாதகாலப் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

தற்போது மரவேலைப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து மேசன், மின் இணைப்பு, தையல் அலங்காரம் போன்ற பயனுள்ள பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி பெறவிரும்புவோர் 31 ஆம் திகதிக்கு முன் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-29)

# நீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 45

நல்லூரிலே சிங்கைநகர் பெயரோடிருந்திருக்கிறது. கி.பி.1590-ல் சங்கிலி அரசாட்சியின்போது போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்துக்கு வரும்போது கோவைத் தேசாதிபதி அப்படையின் போர் வரலாற்றைத் தனக்கெழுதி அறிவிக்கும்படி குவிறோஸ் பாதிரியாரையும் உடன் அனுப்பி இருந்தார்.

போர்த்தர் வரும்போது இருந்த மதிலில் சிங்கை நகர் என்றெழுதப்பட்டிருந்தது. எப்போ, யார் எழுதினார். ஒரு மன்னன் தலைநகர் கட்டிமுடிந்த பின்தான் முடிசூடுகிறது. அதற்கு முன்னர் தான் நகர்க்குப் பெயர் வைக்கின்றது. முடி சூடும்போதே தலைநகர் கட்டிமுடிந்தது. அத்தலைநகரைக் கட்டினது யார் இலக்கிய சகாப்தம் 870ஆம் ஆண்டதெல்லை அலர் பொலிமாலைபனாம் புவனேகபாகு நலமிகு யாழ்ப்பாண நகரிகட்டி" என்பதால் (கை.மா.த.செ) புவனேக பாகுதான் கட்டி எழுதிவிட்டிருக்க வேண்டும், அது தானா போர்த்தர் வரும் போது இருந்தது. ஆம் அத்தலைநகரிலிருந்துதான் இச்சிங்கை ஆரிய மன்னர் வாழையடி வாழையாய் அரசாண்டு வந்துள்ளனர். போர்த்தரோடு பொருதி சங்கிலி மன்னனும் அதில்தான் இருந்தான். இப்பரம்பரை எக்காரணம் கொண்டும் தலைநகரை இடம் மாற்றியமைக்கவில்லை. அங்ஙனமாயின் போர்த்தர் கி.பி.1590-ல் சந்தித்தது. இந்த மதிலைத்தான் அஃதெங்ஙனம் போர்த்தர் சந்தித்தது இம்மதிலின் தென்பக்கமதிலை. அப்பக்கமதில் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்குமிடையில் தான் போயிருக்கும்.

கோட்டைவாசல் கிழக்குப்பக்கம். கி.பி.1450வரை செண்பகப்பெருமாள் படைஎடுத்தான். எனவே அவன் படைஎடுப்பின் 140வருடம்வரை பின்னும் கி.பி.1590வரை அம்மதில் இருந்திருக்கு. அஃதெப்படிச் செண்பகப்பெருமாள் இடித்தான் தலைநகரை என்று பிறர் சொல்லுகிறார்களே என்னின் அவர்கள் சொல்வது வாயாதாரம் தான் புத்தியாதாரங்கூட இல்லை. சான்றாதாரம் இல்லை. ஆகவே நல்லூரில் சிங்கை நகர் என்றெழுதப்பட்டிருப்பது வேறோர் இடத்திலிருந்த சிங்கை நகர் ஞாபகத்துக்காக வல்ல அவ்விடத்திலிருந்த உண்மைச் சிங்க நகரை விளக்கவே என்றறிக.

## 37. யாழ்ப்பாண வைபவமாலையும் யாழ்ப்பாண வைபவவிமர்சனமும்

யா-வைபவமாலை 18ஆம் நூற்றாண்டில் வெளியாகியது. யா.வைபவ விமர்சனம் இருபதாம் நூற்றாண்டில் கி.பி 1928ல் இயற்றப் பெற்றது. இந்த வை.வி காரருக்கு இந்த வைபவ மாலையில் சொல்லப்பட்ட சரித்திரங்கள் முடிபுகள் நன்கு தெரிவித்திருக்க வேண்டும். அன்றியும் அந்நூற் கூற்றுக்களைத் தம் நூல்களில் சுட்டியும் பேசியுள்ளனர். அங்ஙனம் ஆகையால் அந்நூலின் முடிபுகள் இவர்க்கு நன்கு தெரிந்திருக்கும் என்பது நிச்சயம். ஆனால் இந்த வை. விகாரர் அநேக இடங்களில் அவ் வைபவமாலை முடிபுகளுக்கு எதிர்முடிபுகளைக் கூறுகிறார். அங்ஙனம் கூறுமிவர் அந்நூலின் ஒரு முடிபு தமக்குடன்பாடின்மை கண்டால் அதற்காதாரம் காட்டித் மறுத்து தமது இப் புதுமுடிபு கொள்ள காரணமாய் இருந்த ஆதாரத்தை எடுத்துக்காட்டித் தம்முடிபை நிறுத்துதல் வேண்டும். இவர் மறுப்பதற்கும் ஆதாரம் காட்டவில்லை. நிறுத்தும் புது முடிபுகளுக்கு ஆதாரம் காட்டவில்லை. தாம் விரும்பியவாறு மனம் வந்த வண்ணமே சொல்லிக் கொண்டு போகிறார். அவையெல்லாம் முன்னர் நடந்து முடிந்த சரிதமாக அதாவது மெய்ச்சரிதமாக இருக்குமோ? நாம் நடு நின்று அவ்வுண்மைகளை கண்டுகொள்ள வேண்டும். அவ்விரு நூல்களிலுமுள்ள சரிதக் கூற்றுக்களை இங்கே காண்போம்.

யா. வை. மாலை

1. சோழ இராசகுமாரன் நல்லூருக்கு வந்தான்.
2. இவன் 948ல் நல்லூருக்கு வந்தான்.
3. இவன் நல்லூரில் சிங்கை நகரை அமைத்தான்.
4. இவனுக்கு கையொன்று கூழையாயிருந்ததால் கூழங்கையன் என்று பெயர்.
5. கைலாயமாலையில் 'நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லைக்குலவிய கந்தவேட்குக் கோயிலும் புரிவித்தானே' என்பது அமைச்சர் புவனேகபாகுவைப் பற்றியது என்று வைபவ மாலை சொல்லுகிறது.
6. கீரிமலை நகுலமுனிவர் தொடர்பால் வந்த பெயர்.
7. மாவிட்டபுரம் குதிரை முகம் நீங்கியதால் வந்த பெயர்.
8. சின்னமனத்தார் செய்த விருந்தை அமைச்சர் பாராட்டிப் பாடினார்.

யா. வை. விமர்சனம்

1. கலிங்கமாகன் வல்லிபுரத்துக்கு வந்தான்.
2. இவன் 1248ல் வல்லிபுரத்துக்கு வந்தான்.
3. இவன் வல்லிபுரத்தில் சிங்கைநகரமைத்தான்.
4. இல்லை, காலிங்க என்ற பெயரைத்தான் கூழங்கையென்று சொல்லுகின்றனர்.
5. இவர் நகரிகட்டுவித்து என்பது காலிங்கராசன் சிங்கை நகரைக் கட்டியதையும், செண்பகப் பெருமாள் நல்லூர் நகரைக் கட்டியதையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டியதையும் சுட்டிவந்ததாகக் கூறுகிறார்.
6. கிரியும், கிகிரியும், மலையும் சேர்ந்தால் வந்த பெயர்.
7. பெரிய ஆலமரம் நின்ற காரணத்தினால் வந்த பெயர்.
8. செண்பகப்பெருமாள் தான் அவ்விருந்தைப் பாராட்டிப் பாடினார்.

இவ்வாறு வைபவமாலையில் சொல்லப்பட்ட புருடர்கள் அவர்கள் சம்பவங்களுக்கு அன்றியும் வேறும் சம்பவங்களுக்கு நேர்மாறாகவே இவ் வைபவ விமர்சனக்காரர் சொல்லுகிறார். வைபவமாலை 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் 20ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. இரண்டு கூற்றுக்களும் மெய்யாக இருக்காது. அதாவது ஒரு கூற்று உண்மையானால் அதற்கு நேர்மாறாகச் சொல்லும் கூற்றில் உண்மை இருக்காது. அதனை மறுக்கவும் சான்று கிடைக்காது. வைபவமாலை உலாந்தேசு மன்னன் கேட்க வையாபாடல், கைலாயமாலை, பரராசசேகரன் உலா, இராசமுறை என்பனவற்றில் உள்ள வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து அவற்றில் உள்ளபடியே இந்நூலை எழுதினார் என்று அதன் பாயிரகாரர் சாட்சி பகர்கின்றார். வைபவ விமர்சனக்காரர் இந்நூல் முடிபுகளுக்கு மாறுபாடாகக் கூறுகிறார்.

ஒரு சான்றுகளை ஆதாரங்காட்டி இக்கூற்றுக்களை மறுக்கவுமில்லை ஏதாவதொரு ஆதாரங்காட்டித் தம் கூற்றை நிறுவவும் இல்லை. வைபவமாலைக் கூற்றுக்கள் உண்மையானால் இவருக்கு மறுக்கவோ நிறுவவோ சான்று கிடைக்காது. இவ்வளவிலே யா.வை.வி. காரர் யாழ்ப்பாண வைபவமாலைக்கு மாறுபாடாக ஒரு நூலை இல்லாத புருடர்களையும் நிகழாத நிகழ்ச்சிகளுங் கொண்டவைகளாகப் படைத்திருக்கின்றார் என்றுதான் நமக்குத் தோன்றுகின்றது. உண்மைச் சொர்க்கம் வேறாய் இருக்க விசுவாமித்திரர் திரிசங்குவுக்காக ஒரு சொர்க்கத்தைப் படைத்ததைப் போல இந்நூலின் போக்கு இருக்கிறது.

(தொடரும்)

# அடையாள அட்டை காட்டிக் கொடுத்த உருக்குலைந்த சடலம்

(கொழும்பு)

கதிர்காமம் போகும் வழியில் அம்பலாங்கொடையில் கடந்த 26ஆம் திகதி சுனாமி பேரலை அனர்த்தத்தில் சிக்கிக் காணாமல் போன பாராளுமன்ற ஹெரன்விட் பதிப்பாசிரியர் அமித் குடும்பத்தினரின் சடலங்களை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த அவரது உறவினர்கள் கடந்த வாரம் அவரது சடலத்தை மாத்திரம் அம்பலாங்கொடை தெல்வத்த என்ற இடத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

உருக்குலைந்து அடையாளம் காணமுடியாத நிலையிலிருந்த அவரது சடலத்தை, அவரது காற்சட்டை பின்புறப் பையிலிருந்த பாராளுமன்ற அடையாள அட்டையிலிருந்தும் கைக்கடிகாரத்தையும் கொண்டே அவரது உறவினர்கள் அடையாளம் கண்டனர்.

அவர் பிரயாணம் செய்த காரும் அவரது மனைவி, இரு பிள்ளைகளும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (து)

# வடக்கு-கிழக்கில் பெரும் பகுதி அரச கட்டுப்பாட்டில் உள்ளது

## இப்படிச் சொல்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் நிவாரணப்பணிகளை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவில்லை. அவர்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஊடாகவே மேற்கொள்கின்றார்கள். எனவே அது ஒரு அரச சார்பற்ற அமைப்புத்தான். அவர்களும் மற்ற அரச சார்பற்ற அமைப்புக்களுடன் சேர்ந்து பணியாற்றலாம் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோரின் சந்திப்பின் பின் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்..

வடக்கு-கிழக்கில் பெரும்பகுதி இன்னமும் அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில்கூட அரசாங்க அதிபர்கள் இருக்கின்றார்கள். கிழக்கில் மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் பெரும்பகுதி அரச கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

சுனாமி கடல் கொந்தளிப்பு அனர்த்தம் எமக்கு ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டியிருக்கின்றது. இயற்கையைப் பொறுத்தவரை அது சிங்களவர் என்றோ, தமிழர் என்றோ, முஸ்லிம் என்றோ பிரித்துப் பார்க்கவில்லை.

எந்த மதத்தையும் அது பார்க்கவில்லை. இயற்கை இந்த வேறுபாடுகளையெல்லாம் மதிப்பதில்லை. இது நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம். நம்முடைய கருத்து வேறுபாடுகளை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று இயற்கை எமக்குப் போதித்த பாடம் என அவர் கூறினார். இரு தசாப்தகால இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் நாம் இருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

நோர்வேக் குழுவுடனான சந்திப்பில் இது பெரும்பாலும் நிவாரண மற்றும் மீள்கட்டமைப்பு உதவிகள் குறித்தும் பேசினார். அவர்கள் களத்தில் நிவாரணப் பணிகள் எவ்வாறு நடக்கின்றன என்பதைப் பார்க்க பல இடங்களுக்கும் செல்லவுள்ளார்கள் எனத் தெரிவித்தார். (ச-4)

# "எவரெடி" வெற்றிக்கிண்ணப் போட்டிக்கான யாழ். அணி தெரிவு செய்யப்படவுள்ளது

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்படவுள்ள 19வயதிற்கு உட்பட்டோர்களுக்கான "எவரெடி" வெற்றிக் கிண்ணப் போட்டிக்கு யாழ். அணியை யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி தெரிவு செய்யவுள்ளது.

தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் இன்றும் எதிர்வரும் 24ஆம் திகதியும் பி.ப 4 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்கிளிபேட் அன்ரனிப்பிள்ளையின் தலைமையில் நடைபெறும்.

இப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்களும் பாடசாலைகளும் தமது கழகத்திலிருந்து சிறந்த வீரர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வீரர்கள் 1.1.1986 ஆண்டிற்கு பின் பிறந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-110)

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அம்பாறைக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடல் கொந்தளிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய மீள்கட்டுமானப்பணிகள் குறித்து நேரில் ஆராய்வதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அப்பிரதேசங்களுக்கு நேரில் சென்றார்.

தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நேற்றுடன் ஒருவருடம் பூர்த்தியானது.

அந்த நாளை நினைவுகூரும் வகையில் பிரதமருடன் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.உட்பட கட்சியைச் சோந்த அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கு சென்றிருந்தார்கள்.

பாதிப்புக்குள்ளானு சில பிரதேசங்களை நேரில்சென்று பார்வையிட்ட பிரதமரும் அவரது குழுவினரும் இருப்பிடங்களை இழந்துள்ள குடும்பங்களுக்காக மணற்சேனையிலும் இஸ்லாமபார்த்திலும் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களையும் பார்வையிட்டனர்.

காரைதீவு மற்றும் கல்முனை பிரதேசங்களில் கடற்கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களின் மரணச் செலவுக்காக கொடுப்பனவாக தலா 15ஆயிரம் ரூபாவுக்கான காசோலையினை வைபவ ரீதியாக சில குடும்பங்களுக்கு பிரதமர் வழங்கினார்.

இதன் பின்பு உடனடி மீள் கட்டுமானப்புணிகள் குறித்து பிரதமர் அமைச்சருடனும் சிவில் அதிகாரிகளுடனும் ஆராய்ந்தார்.

(ச-4)

# கோபத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி?



'ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு', 'ஆத்திரம் அழிவைத் தரும்' என்பதெல்லாம் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து சொல்லப்படும் வாக்குகள். இதில் 2 ஆவதாக உள்ள வாக்கு இருதய நோய்களுககு அப்படியே பொருந்தும்.

மூக்குக்கு மேல் வரும்கோபம் மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்துவிடும் என்று வலலுநர்கள் சொல்கிறார்கள். 55 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் கோபப்பட்டால் அவர்கள் மாரடைப்பு உள்ளட்ட இதய வியாதிகளால் உயிரிழப்பதற்கான வாய்ப்பு 3மடங்கு அதிகமாகும். இதுவே 55 வயதுக்குக் கூடுதலாக இருந்தால் உயிரிழப்பு ஆபத்து 6 மடங்கு அதிகமாகும்.

**சரி, கோபம் கொள்வதால் மாரடைப்பு எப்படி வருகிறது தெரியுமா?**

கோபமானது இதய இரத்த நாளங்களைக் கடினமாக்கும் அடைப்புகளை திடீரெனச் சிதைப்பதால், அங்கே அடைப்பு வேகமாக உண்டாக வாய்ப்பேற்படும். இதனால் மாரடைப்பு உண்டாகிறது.

இதயத் தசைகளில் வலிப்பது, இதயத் துடிப்பில் பாதிப்பு, உயர் இரத்த அழுத்தம், ஆங்சைனா எனப்படும் நிலையற்ற நெஞ்சுவலி போன்ற சிக்கல்களும் கோபத்தினால் ஏற்படும் விளைவுகள்தான். மூளையைத் தாக்கும் பக்கவாதத்துக்குக் கூட கோபம் காரணமாக அமைவதுண்டு.

ஆக, கோபம் உங்களை எரிப்பதற்கு முன் நீங்கள் அதை எரித்துவிடவேண்டியது முக்கயம். கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஒவ்வொருவரும தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

கோபம் என்பது உடல் ரீதியாக, மன ரீதயாக, சமூக ரீதியாக, உளவியல் ரீதியாக, உணர்ச்சி பூர்வமான, சுற்றுச்சூழல் சார்ந்த பல விடயங்களுடன் நமக்கு உண்டாகும் எதிர்மறையான சூழ்நிலை மற்றும் பிற செய்கைகள் காரணமாக உண்டாகிறது. கோபம் வரும்போது மனிதன் தன்னிலை இழக்கிறான்.

இதனால்தான் கோபத்தில் கொந்தளிப்பவர்களுக்கு வியர்வை, நடுக்கம், மூக்கு விடைத்துக்கொள்ளுதல், தூக்கமின்மை, ஓய்வின்மை, நெஞ்சுவலி, மாரடைப்பு, இரதத' அழுத்தம் திடீரென அதிகரித்தல், எரிச்சல், தசைகள் இறுகிய தன்மையாதல், தலைவலி போன்ற பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.

ஆகவே நீண்டநாள் வாழவேண்டுமானால் உங்களது கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

---

# சோக்கிரடீசின் ஆர்வம்

கிரேக்கத்தின் பெருஞ்சிறையில் சிறைப்படுத்தப்பட்ட தத்துவஞானி சோக்கிரடீஸ் தனது மரணததை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

அவருடன் அந்தச்சிறையில் இருந்த மற்றொரு கைதி ஒருநாள் ஒரு பாடலைப் பாடினான்.

உடனே சோக்கிரடீஸ் அவனிடம் ஓடிச்சென்று அந்தப் பாடலை மண்டும் ஒருமுறை பாடிக்காட்டுமாறு கேட்டார்.

'மரணதண்டனைக் கைதியான உனக்குச் சாகப்போகும் நேரத்தில் இது எதறகு?' எனறு ஏளனமாகக் கேட்டான் அந்தக் கைதி.

'சாவதற்குள் இன்னும் ஒரு புதிய விஷயத்தைக் கூடுதலாகத் தெரிந்துகொள்ளலாமே' என்று பதில் கூறினார் தத்துவஞானி சோக்கிரடீஸ்.

எதையும் துருவித் துருவி தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் கடைசி வரை இருந்தது அந்த தத்துமேதைக்கு.

---

# முடி நரைப்பதற்கும் தோல் புற்றுநோய்க்கும் உள்ள தொடர்பு

வயது ஏற ஏற தலைமுடி நரைப்பது வழக்கமான ஒன்றுதான். ஆனால் அமெரிக்காவின் பொஸ்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதை வேறுவிதமான கோணத்தில் அலசி ஆராய்ந்து வருகின்றனர்.

'மெலனோமா' என்பது தோல் புற்றுநோய்களில் மிகக்கொடியது. இவ்வகை புற்றுநோய் தோலிலுள்ள 'மெலனோசைட்ஸ்' என்ற நிற செல்களைக் குறிவைத்துத் தாக்கும். இத்தகைய நிறசெல்கள் மற்றவகை புற்றுநோய்களைப் போல இறந்து விடுவதில்லை. பதிலாக கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் பன்மடங்காகப் பெருகும்.

இதே நிற செல்கள்தான் முடிக்கு நிறம் கொடுக்கும் வேலையையும் செய்கிறது.

எனவே, ஒரு மனிதன் தோல் புற்றுநோய்த் தாக்குதலுக்கு ஆளாவதற்கும், அவனுடைய தலைமுடி நரைப்பதற்கும் இடையே ஏதாவது தொடர்பு இருந்தே தீர வேண்டும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அப்படிப்பட்ட முக்கியமான தொடர்பு அல்லது காரணத்தைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் கொடிய மெலனோமா தோல்புற்றுநோய்க்கு புதிய சிகிச்சை முறையினைக் கண்டுபிடிப்பதுடன், தலைமுடி நரைத்துவிடாமல் அதனுடைய இளமையைப் பாதுகாப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.


---

* ஒரு கவலையை நீங்கள் தூக்கியெறிந்தால் அந்தக் கவலை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்குமேயல்லாமல் உங்கள் மீது திணிக்கப்பட்டதாக இருக்காது.

* கேட்கப்படும்போது கொடுப்பது நல்லது. கேட்காமலே புரிந்துகொண்டு கொடுப்பது அதைவிட நல்லது.

* எவ்வளவுககெவ்வளவு ஆழமாகத துன்பம் உங்களைச் செதுக்குகிறதோ, அந்தளவுககு நீங்கள் இன்பம் பெறுவீர்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-44



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 44**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------------

***மேலுள்ள கூப்பனில் வீடைகளை நிரப்பி' எதிர்வரும் 27ஆம் த்'கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.***

## இடமிருந்து வலம்

(1)விழா - இப்படியுமழைப்பர் (குழம்பியுள்ளது). (5)இது சொன்னதைச் சொல்லும் வீட்டுப் பறவை. (6)நவக்கிரகங்களிலொன்று. (7)கிழமைகளிலொன்று (வ.இ). (9)அறிவு - இதனைக் குறிக்கும். (10)கிருபை.

## மேலிருந்து கீழ்

(1)நற்குணமுடையோனை இப்படியுமழைப்பர். (2)பெண்ணுக்கு இப்படியுமொரு பெயருண்டு. (3)இது செவிக்கும் இதயத்திற்கும் இதமளிக்கும். (4)'இது உறவுக்குப் பகை என்பர்'. (7)தங்கத்தின் மாசு நுஙகச் செய்யும் செயலை இப்படியுமழைப்பர். (8)அம்பு - இதனைக் குறிக்கும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 42இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அகதிகள் 3.கனி 4.சடங்கு 5.வனம் 8.சந்தனம் 10.பயம்

**மேலிருந்து கீழ்**

1.அரசன் 2.திருடன் 5.வதனம் 6.ஆகமம் 7.பதம் 9.பண்

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | **K.யாழினி<br>பு...பிரத நிலையவீதி,<br>கொக்குவில்.** |
| **இரண்டாம் பரிசு** | :- | **V.சாரங்கன்<br>இமயாணன் வீதி,<br>உடுப்பிட்டி.** |
| **மூன்றாம் பரிசு** | :- | **ச.காருணியா<br>46/2 அரசவீதி,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம்.** |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அத'ஷடசாலிகள'ன் பெயர் வ'பரம்**

வி.இளங்கோ, கோப்பாய். க.விமலாவதி, இளவாலை. து.துஷாந், சுனாகம். வை.சசிகுமார், சாவகச்சேரி. சு.தர்சினி, வண்ணார்பண்ணை. லோ.சுவஸ்திகா, உடுப்பிட்டி. சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். திருமதி.S.பாக்கியநாதன், வட்டுக கோட்டை. சி.அபிராஜ், சுன்னாகம். வ.வனிதா, யாழ்ப்பாணம். வி.செல்வநாயகம், புத்தூர். கே.இராஜகோபால், தொல்புரம், சி.விவேக், வியாபாரிமூலை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. கே.அரசேஸ்வரன், நல்லூர். S.விதுஷன், கொக்குவில். அ.அனித்தா, சித்தன்கேணி. ம.சர்மினி, கோண்டாவில். T.S.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. கோ.குகன், வேலணை.

## இன்று ஒரு தகவல்

# எல்லாம் முடியும்

ஒரு சிறு கிராமம். அங்கே இரண்டுபேர் சிறு வயது முதலே ஒன்றாக வளர்ந்தவர்கள். அந்த இரண்டு பேரில் ஒருவன் மட்டும் கொஞ்சம் வசதி படைத்தவன். சில நாட்கள் பாடசாலை போய்ப் படித்தான். அதன பின் அந்தக் கிராமத்தை விட்டு நகரத்திற்குப் போனான். வியாபாரம் செய்தான். பணம் சேர்ந்தது. பட்டணத்தில் பங்களா கட்டிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டான்.

இன்னொருவன் கிராமத்திலேயே மாடு மேய்த்துக் கொண்டு இருந்துவிட்டான். பள்ளிக்கூடம் போக வில்லை. படிக்கவில்லை.அந்தக் கிராமத்தை விட்டு வெளியே எங்கும் போனதில்லை. அதனால் வெளி உலகமே தெரியாமல் வளர்ந்துவிட்டான்.

இவன் ஒருநாள் பட்டணத்திற்குப் போக வேண்டியிருந்தது. விவரம் தெரிந்த சிலரது துணையுடன் அங்கு போய்ச் சேர்ந்து விட்டான். மெதுவாக தனது பழைய நண்பனிருந்த இடத்தையும் விசாரித்துக் கண்டுபிடித்து போய் சேர்ந்தான். அவன் கட்டியிருந்த பெரிய பங்களாவைப் பார்த்து அசந்து போய் நின்றுவிட்டான். அவன் இவனைப் பார்த்ததும் 'வா' என்றழைத்து உள்ளே கூட்டிக் கொண்டு போனான்.

இவன் மெதுவாக உள்ளே போனான். இவனுக்குப புரியாத சமாச்சாரங்கள் என்னென்னவோ இருந்தன அங்கே. நீ மிகவும் பெரிய ஆளாகிவிட்டாய் என்றான். " எல்லாவற்றுக்கும் நான் தான் காரணம்'' என்று மிகவும் பெருமையாகச் சொன்னான் அவன். "அது சரி... சரியான களைப்பாக இருக்கிறது. வெயிலில் வந்தது ஒரு விசிறி மட்டை இருந்தால் தா'' என்று கேட்டான் இவன்.

" விசிறி மட்டை எதற்கு அதுதேவை இல்லை. இதோ இப்போது காற்று வீசச் சொல்கிறேன் பார்" என்று மின்விசிறியின் பட்டனைத் தட்டிவிட்டான். அது சுழல ஆரம்பித்தது. காற்று வந்தது. இவன் ஆச்சரி யமாக அண்ணாந்து பார்த்தான். " என்ன பார்ககிறாய் எல்லாம் என்விரல் நுனியில் இதைத் தொட்டால் போதும். அது சுற்ற ஆரம்பித்துவிடும" என்றான அவன்.

" நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான். அது இருககட்டும். இருட்ட ஆரம்பித்து விட்டதே. ஒரு சின்ன விளக்கு அல்லது மெழுகுவர்த்தி இருந்தால் கொண்டு வா" என்றான். "அது எதற்கு வெளிச்சமும் நான் சொன்னால் வரும்" என்று கூறி ஒரு சுவிட்சைத தட்டினான். உடனே பிரகாசமான வெளிச்சம். இவன மிகவும் ஆச்சரியமாக அதைப் பார்த்தான்.

பட்டணத்து நண்பன் இதைக் கவனிததான். " என்ன ஆச்சரியப்படுகிறாய்" என்று சொல்லி வானொலியைப போட்டான். அது பாட ஆரம்பித்தது. தொலைக் காட்சியைப போட்டான்.அதில் படம் வர ஆரம்பித் தது. " பார்த்தாயா?... என்னால் எல்லாம் முடியும். எல்லாம் என்விரல் நுனியில்" என்றான்.இந்தச் சமயத்தில் தான் அது நடந்தது.

அதாவது திடீரென்று மின்சாரம் நினறுவிட்டது. பவர்கட. கிராமத்து ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இருட்டாக்கி விட்டாய்? வெளிச்சத்தைக் கொண்டு வா'' என்றான். மின்சாரம் போய்விட்டது. அதனால் விளக்கு எரியாது'' என்றான் அவன். இவனுக்கு அது புரியவில்லை. சரி அப்படியென்றால் விசிறியைப் போடு'' என்றான். "அதுவும் வேலை செய்யாது" என்றான்." ரேடியோவையாவது பாடவை" என்றான் அவன. " அதுவும் முடியாது ''என்றான் இவன்.


"என்ன இப்படிச் சொல்கிறாய்? எல்லாம் விரல் நுனியில். என்னால் எல்லாம் முடியும். நான்தான் காரணம் என்றாய்.இப்போது அந்த நான் எங்கே போனது?" என்றான். அவன் தலையைத் தொங்கப் போட்டுவிட்டான. இன்று நம்மில் பலபேருடைய நினைப்பு இப்படித்தான் உள்ளது. அதனால் தான் அவ்வப்போது அல்லாடிக் கொண்டிருக்கிறோம்.

நமது ஆள் ஒருவன் ஆஸ்பத்திரியில் படுத்திருந் தான் . உடல் முழுவதும் கட்டு. "என்ன நடந்தது?" என்று கேட்டார் அங்கு வந்திருந்த ஒருவர். இவன் தனது விரல் நுனியைக் காட்டினான். " இதுதான் சார் காரணம்'' என்றான். அவருக்கு ஒன்றுமே புரிய வில்லை. "என்னப்பா சொல்கிறாய்?" என்றார்.

"இந்த விரல் நுனியை ஏங்கள் வீட்டு சுவற்றில் வைத்தேன்.உடனே என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து போட்டு விட்டார்கள்'' என்றான். "வீட்டுச் சுவற்றில் விரல் வைப்பது தவறா?" என்றார். "விரல வைப்பது தவறில்லை சார். அப்படி வைக்கின்ற இடத்தில் மின்சார வயர் தொங்கிக் கொண்டிருந்தது அதுதான் தவறு" என்றான் இவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவது அவசியம்



## பிரதமர் மகிந்த வலியுறுத்து

(அம்பாந்தோட்டை)

**சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமையை கட்சி மற்றும் இனபேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமாகக் கொள்ள வேண்டும் என பிரதமர் மக'ந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டையில கடந்த புதன்கிழமை நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கமும்,எதிர்க்கட்சியும் இணைந்து வாதப் பிரதி வாதங்களைக் கைவிட்டு எதிர்காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதாவது இந் நடவடிக்கைகளுக்குப் பல வருடங்கள் தேவைப்படும். இத்ற்கு அனைத்துத் தரப்பினரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம்.

இந்த அனர்த்தத்தில் இருந்து நாட்டை கட்சி, இனபேதமின்றி கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். மண்டும தத்தமது வீடுகளுக்குச் செல்பவர்களுக்கு வங்கிகளின் ஊடாக 50 ஆயிரம் ரூபாவை ஆரம்பத் தொகையாக வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவர்கள் தமது அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# பரிவர்த்தனை இயந்திரங்களின் வலுக்குறைவால் புதிய இணைப்புகள் வழங்குவது இடைநிறுத்தம்

## ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.ரெலிக்கொம்மின் முகாமையாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

புதிய தொலைபேசி இலக்கங்கள் வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதால் புதிய இணைபபுகள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.ரெலிக்கொம்மின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள பரிவர்த்தனை இலத்திரனியல் இயந்திரங்கள் குறைந்த அளவு தொலைபேசி இணைப்புக்களுக்குப் பயன்படுத் தககூடிய வலுவுடையதாக இருப்பதால் விண்ணபபிக்கும எல்லோருக்கும் தொலைபேசி இணைபபுகள் வழங்க இயலாமல் உள்ளதாக அவர் மேலும தெரிவித்தார்.

இதுவரை சுமார் 7ஆயிரத்து 321 தொலைபேசிகளே யாழ்.மாவட்டத்தில் பாவனையில் உள்ளன. இதுவரை சுமார் 16ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களுக்கு விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகவும் அவ் விண்ணப்பங்களில் தொழிற்துறை நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், அரச துறை நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தனிநபர்கள் போன்றனவற்றுக்கே தாங்கள் இதுவரை முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புக்களை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடநத 2003ஆம் ஆண்டு 3ஆயிரம் தொலைபேசி இணைப்புகளும் கடந்த ஆண்டு ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களுமே வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறிதது யாழ்.பிராந்திய முகாமையாளர் என்ற வகையில் தலைமைப்பீடத்துக்கு இங்குள்ள நிலைமைகளை விரிவாக எடுத்துக் கூறிவருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த மாத இறுதியில் இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் சுன்னாகத்தில் தரைவிரிவாக்கத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், சாவகச்சேரி மற்றும் சித்தங்கேணி பிரதேசத்திலும் இவ்வாண்டு முடிவுககுள் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள ஆரம்பிக்கப்படவுளளதாகவும் யாழ். பிராந்திய முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்நிலைப்பாடு குறித்து அங்கு தொலைபேசிக்கு விண்ணப்பிக்க வந்த பொது மக்களிடம் இதுபற்றிக் கேட்டபோது,

தொலைபேசி அத்தியாவசியமான சேவை. இச் சேவை எங்களுக்குக் கிடைக்காவிட்டால் நாங்கள் எனன செய்யமுடியும். யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் இத் தொலைபேசி வசதிகளை யாழ.மக்களுக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிததனர்.

(று-5,19)

# இராசி பலன்

**22.01.2005**

**(தை 9 சனிக்கிழமை)**
**துவாதசி முற்பகல் 10.35மணிவரை**
**மிருகசீரிடம் முன்னிரவு 7.14 மணிவரை**
**இராகுகாலம் 9.36 - 11.06 மணிவரை**
**சுபநேரம் 3.36 - 5.06 மணிவரை**
**சனிப்பிரதோச விரதம்**

**மேடம்** *சுவாரஸ்யம், காரிய சித்தி, பெருமையடைதல், போசன சுகம்.*

**இடபம்** *உணர்ச்சி வசப்படுதல், பணவிரயம், காரிய தாமதம், ரோகநிலை*

**மிதுனம்** *போசன சுகம், வெகுமானம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்*

**கடகம்** *இடமாற்றம், சோம்பல் நிலை, பணவிரயம், வேலைச்சுமை*

**சிங்கம்** *பெருமையடைதல், எடுத்த கருமங்கள் கைகூடும், வாக்குமேன்மை, குடும்ப நலம்*

**கன்னி** *அதிகாரம், தொழில் சிந்தை, காரிய அனுகூலம், போசன சுகம்*

**துலாம்** *புதிய திட்டமிடல், பிதா வழி உறவு, காரிய தாமதம், பிரயாணம்*

**விருச்சிகம்** *வாகன பயம், மனக்கவலை, தொழில் மந்த நிலை, முயற்சி தாமதம்*

**தனுசு** *நண்பர்கள் உதவி, போசன சுகம், தேக நலன், கீர்த்தி*

**மகரம்** *தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், விருந்துபசாரம், சிந்தனை மிகுதி*

**கும்பம்** *வியாபார நன்மை, ரோக நிலை, முயற்சி தாமதம், தனவிரயம்*

**மீனம்** *தாய்வழி உறவு, முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு, பண விரயம்*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

# மழை தொடரும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு, வடமத்திய ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தளை மாவட்டத்திலும் தொடர்ந்து மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் கடும் மழை பெய்வதால் அங்கு மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-60)

# சுனாமியால் அழிவடைந்த நாட்டைக் கட்டியெழுப்ப

# அனைத்துத் தரப்பினரதும் ஒன்றிணைவு மகிழ்ச்சிக்குரியது

## —அமைச்சர் அனுரா பண்டார நாயக்க

(கொழும்பு)

நாட்டைச் சரியான பாதையில் இட்டுச்செல்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தால் முடிந்திருக்கின்றது என சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உறுதியாக தேசிய இலக்கினை அரசாங்கம் கொண்டிருப்பதால் பல்வேறு சவால்களையும் வெற்றிகரமாக முறியடிக்க முடிந்திருக்கின்றது.

பொதுத்தேர்தலில் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு அமைய 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசதுறை வேலை வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேசிய கொள்கைகளுக்கு அமைய நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை ஆராத்தபூர்வமாக மாற்றும் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவும், பின்னர் அதனை நடைமுறைப் படுத்தவும் அரசாங்கத்தால முடிந்துள்ளதாகவும் அவா மேலும தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்பாராத இயற்கை அனர்த்தத்தில் சிக்கி மக்களும், நாடும் தத்தளித்த போதும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து தேசத்தைக் கட்டியெழுப்ப முனைந்திருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் வழங்கிய உதவிகளை சரியாகப் பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

கடற்கரையில் இருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் உல்லாசப்பிரயாணங்களுக்கான விடுதிகளை அமைப்பது என சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது.

இந்தச் சட்டம் நெகிழ்வுப் போக்குடையதாக இருப்பதோடு அநேகமான முதலட்டாளர்கள் ஏற்கனவே பாரிய தொகையினை இதற்கென ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் மேலும தெரிவித்தார். (ர-4)

## நான்கு சடலங்கள் மீட்பு

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த மேலும நான்கு சிறுவர்களின் சடலங்கள முல்லைத்தீவில் கட்ட இடிபாடுகளுக்கு இடையிலிருந்து நேற்று முன்தினம் மிகவும் பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

மீட்புப்பணியாளர்களினால் கடற்கரையில் இச்சடலங்கள் தகனம் செய்யப்பட்டன. ஆறு வயதிற்கும் எட்டு வயதிற்கும் உட்பட்ட சிறுவர்களுடைய சடலங்களே இவையென மீட்புப்பணியாளர்கள் தெரிவித்தனர்.

அடையாளம் காணமுடியாதளவிற்கு சடலங்கள் பழுதடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-4)

# கோதுமை மாவுக்கு கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுளள கோதுமை மாவிற்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையொன்றை விதித்துள்ளது.

இதன்படி பைக்கற்றில் அடைக்கப்படாத கோதுமைமா ஒரு கிலோ 27 ரூபாவிற்கும், சுகாதார முறைப்படி தொழிற்சாலைகளினால் பைக்கற்றில் அடைக்கப்பட்ட கோதுமைமா 32ரூபாவிற்கும் விற்பனை செய்யவேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

மேற குறிப்பிட்ட கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக கோதுமை மாவை விற்பனை செய்யும வாத்தகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, அதிகாரசபையின் சட்டமூலத்திற்கு அமைய 50 கிலோகிராம் எடையுள்ள கோதுமை மா பொதியொன்றின் விலை பிரதேசத்திற்கு ஏற்ப மாறுபடுகின்றது.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் 50 கிலோ கோதுமை மா பொதி ஒன்றின் விலை ஆயிரத்து 300 ரூபாவாகவும், கிளிநொச்சியில் ஆயிரத்து 285 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் ஆயிரத்து 200 ரூபா முதல் ஆயிரத்து 210 ரூபா வரை விற்பனை செய்யப்படவுள்ளது. (க)

# சுனாமி தாக்குதலை முன்கூட்டியே அறிய விலங்குகளை பயன்படுத்தலாமா?

(கொழும்பு)

சுனாமி தாக்குதலை முன்கூட்டியே அறியும் முயற்சியில் விலஙகுகளைப் பயனபடுத்தலாமா? என்பது குறித்து இலங்கை வனவிலங்கு அதிகாரிகள தவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.

இதுகுறித்து. விலங்குகள் நல வாழ்வுக்கான சர்வதேச அமைப்பைச் சேர்ந்த அசோக் தான கோலா என்பவா கருததுக் கூறுகையில்,

இலங்கையில் சுனாமி தாக்குதல் கடுமையாக இருந்தது. இதில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

ஆனால் ஒரு விலங்குகூட பலியாகவில்லை. அவை சுனாமி தாக்குதல் ஏற்படுவதற்கு முன் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சுனாமியை முன்கூட்டியே அறியும் நடவடிக்கையில் விலங்குகளையும் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது.

எந்த அபாயம் ஏற்பட்டாலும் அதிலருந்து தப்பிக்கும் முயற்சியில் விலங்குகள் ஈடுபடும்.

எனவே விலங்குகள் பயந்து ஓடுவதற்குக் காரணம் சுனாமி தாக்குதலா? அல்லது வேறு ஏதாவது அபாயமா? என்பது உடனடியாக அறிந்துகொள்ள முடியாது என்று அசோக் தான கோலா தெரிவித்தார்.

யால தேசிய பூங்காவில் இருந்த யானைகளும் ஏனைய விலங்குகளும் சுனாமித் தாக்குதல் ஏற்படுவதற்குப் பல மணி நேரம் முனபாகவே பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுவிட்டன.

சுனாமித் தாக்குதல் பற்றி மனிதனைவிட விலங்குகள் முன்கூட்டியே அறியும் அளவுக்கு அவற்றின் உணர்வுகள் மிக நுட்பமாக உள்ளன என்று நிபுணர்கள் கருதுகின்றனர். (க-9)

# 3லட்சம் ரூபா தனிநபர் உதவி

(கிளிநொச்சி)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென மூன்று லட்சம ரூபா பணத்தினை புன்னாலைக்கட்டுவன் வாசியொருவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கையளித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இந்த கையளிப்பு இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்நத திருநாவுக்கரசு என்பவரே தனது சொந்தப் பணத்தில் இருந்து இத்தொகையை வழங்கியுள்ளார். (ச-4)

# அதிக சவால்களை அரசு எதிர்கொள்கின்றதாம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கவலை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது எதிர்கொண்ட சவால்களைவிட இன்று அதிகளவான சவால்களை எதிர்நோக்கியுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

இருந்தாலும் இந்த சவால்களை உரியமுறையில் எதிர்கொணடு மக்களின வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் வீடமைப்பு தொகுதிகளுக்கு அடிக்கல் நாட்டு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை நிறுவுவதற்காக உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு ஒருவருட பூர்ததியை முனனிட்டு இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்த நிகழ்வின்போது மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், அமைச்சர் பேரியல் அஷ்ரப், கூடடமைப்பு அமைசசர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-9)

# புதிய நீதிபதிகள் சத்தியப்பிரமாணம்

உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகள் இருவர் நேற்றுமுன தினம் சததியப்பரமாணம செய்து கொண்டனர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வில் நீதிபதிகளான ஆர்.கே.என். ஜி.அமரதுங்க மற்றும் சலீம மர்சூக் ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதேவேளை ஏ.என்.சோமவன்ச நேற்றுமுன்தினம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேன்முறையீட்டு நிதிமன்ற நிதிபதிகளாக டபிள்யூ.எல். ஆர்.சில்வா, சிஸிர ஆர்.டி. அப்றூ, எரிக் பஸ்நாயக்க ஆகியோரும் ஜனாதிபதி முன்னிலையில் சததியப்பரமாணம் செய்துகொண்டனர். (ர-4)

# ஒன்றுகூடுக!

இதுவரை காலமும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்விகற்று வெளியேறிய மாணவர்களின் நன்மை கருதியும், நிறுவன வளர்சசி கருதியும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்கம் அங்குராப்பணம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே இதுவரை காலமும் கல்வி கற்று வெளியேறிய அனைத்து கற்கைநெறி மாணவர்கள அனைவரையும் 24ஆம் திகதி திங்கடகிழமை காலை 10.00மணிக்கு நிறுவனத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ர)

# ஆற்றுப்படுத்தல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரழிவின் காரணமாக உளவியல் ரீதியாகப் பாதிககப்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியான மன ஆற்றப்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக கொழும்பிலுள்ள சர்வதேச பயிற்சி நிதியம் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் பீச் இன் மண்டபத்தில் மன ஆற்றுப்படுத்தல் பயிற்சித் திட்டத்தினை நடாத்தவுள்ளது.

இப் பயிற்சித்திட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள காந்தீகம் அமைப்பின் மன ஆற்றுப்படுத்தும் செயலணியுடன் இணைந்து நடாத்தப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இப்பயிற்சி நெறியில் யாழ்ப்பாணம் சமூகமேம்பாட்டுத்திட்டம, மாவட்டச் சிறுவர் பாதுகாப்புத் திட்டம், சுகவாழ்வு நிலையம், அறவழிப் போராட்டக் குழு ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த பணியாளர்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

சீடா நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமுல்செய்யப்படும் இப் பயிற்சிநெறியைச் சர்வதேச பயிற்சி நிதியத்தின வெளிககள அதிகாரி ஹசன் மொமின் ஆரம்பித்து வைக்கின்றார். (ப-16)

# உயிரிழந்த வெளிநாட்டவர்களை இனங்காண இன்டர்போல் விசாரணை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் சுமார் 150 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வரை உயிரிழந்துள்ளதாகச் சுற்றுலாத் துறையமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாப் ராமனுஜம் தெரிவித்தார்.

மேலும் நூற்றுக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுனாமி பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாபயணிகள் அவர்களது நாடுகளுக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த வெளிநாட்டவர்களின் சடலங்களைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக இலங்கை வந்துள்ள இன்டர்போல் அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் சடலங்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. (ர-4)

# சங்காபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் அமைந்துள்ள வித்யா கணபதி ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ப-79)

# பாதாள உலகக் கோஷ்டியினர் மூவர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

நிக்கம்புவ தங்கொஸ்வட்ட பகுதியில் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்கள் மூவரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளனர்.

நேற்று அதிகாலை இடம் பெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,


பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களான மெஹமட் நியாஸ், அயூகான் மற்றும் மக்டொனல் பைசல் ஆகிய மூவரும் கடந்த புதன்கிழமை கொழும்பு தாஜ் சமுததிரா ஹோடடலில நடைபெற்ற திருமண வைபவமொன்றில வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின்போது இவர்கள் ஆயுதங்களைப் பதுக்கிவைத்துள்ளதாகத் தெரியவந்ததை அடுதது ஆயுதக் களஞ்சியத்தைக் கண்டுபிடிப்பதற்காக இவர்களைப் பொலிஸார் கூட்டிச் சென்றுள்ளனர்.

இதன்போது, பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடையோர் மறைந்திருந்து பொலிஸாரை நோக்கி கைக்குண்டை வீசியுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் மேற்கொணட துப்பாக்கிப்பரயோகத்தில் பிரஸ்தாப மூவரும் ஸ்தலத்திலேயே பலியானதாக நிக்கமபுவ பொலிஸ நிலைய பொறுப்பதிகாரி பெவக்க தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ர-15)

# அமெரிக்காவின் அதிபராக புஷ் மீண்டும் பதவியேற்பு



அமெரிக்க அதிபர் புஷ் நேற்று முன்தினம் மீண்டும் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார். அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த அதிபர் தேர்தலில் ஜோன் கெரியை எதிர்த்துப் போட்டியிட்ட அதிபர் புஷ் மீணடும் வெற்றி பெற்றார்.

இதைத் தொடர்ந்து வோஷிங்டனில் நேற்று முன்தினம் 43ஆவது அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

தலைமை நீதிபதி வில்லியம் ரென் குஸ்ட், புஷஷ்"க்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பைபிளைச் சாட்சியாக வைத்து புஷ் உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்.

21 குண்டுகள் முழங்கிய பின் புஷ் 17 நிமிடம் உரையாற்றினார். அவரது பேச்சில் ஈராக் தேர்தலும் தீவிரவாத ஒழிப்பும் இடம்பெற்றன.

பின்னர் துணை அதிபராக டிக் சென்னி இரண்டாவது முறையாக பதவியேற்றுக்கொண்டார். பதவி ஏற்பு விழா பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கண்கவா அணிவகுப்புகளும், வான வேடிக்கை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(து)



வடக்கு பிரேசிலில் உள்ள சல்வடோர் பகுதி வைத்தியசாலையில் 17இறாத்தல் நிறையுள்ள (எட்டுக்கிலோ) குழந்தை பிறந்துள்ளது. இராட்சதக் குழந்தை என்று அழைக்கப்படும் இக்குழந்தையை 38 வயதுடைய பிரான்சிஸ் காராமோஸ் டொஸ் சன்ரோஸ் என்ற பெண்மணி பெற்றெடுத்தார்.

## நேபாளத்தில் 6 தீவிரவாதிகள் மரணம்


கிழக்கு நேபாளத்தில் நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையில் மாவோ தவிரவாதிகள் 6பேர் உயிரிழந்தனர் எனவும் பாதுகாப்புப படையினர் 29பேரைக் காணவில்லை எனவும் இராணுவத் தலைமையகம் ஓர் பத்திரிகைக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் இலாம் மாவட்டத்திலுள்ள மாய்பொகாரி என்ற இடத்தில் நடந்தது.

(து)



பெங்களூரில் உள்ள லால் பாக் ப,ங்காவில் மலர்க் கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்த மலர் கண்காட்சியைக் காண குடியரசு தினவிழா முதல் பார்வையாளர்கள் அனுமதிக்கபபடுவர். அங்குள்ள மலர்களை ரசித்துப் பார்க்கும் மங்கையர்கள்.



கடலூரில் நேற்று ஏற்பட்ட லேசான கடல் கொந்தளிப்பால் வழக்கத்திற்கு மாறாக சில்வர் பீச்சில் கடல் அலை கரையை வேகமாகக் கடந்து வந்தது. மீண்டும் சுனாமி அபாயம் இருக்குமோ என அஞ்சிய கடலோர மக்கள் வீடுகளைக் காலிசெய்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

## கடலில் மூழ்கிய வடகொரிய சரக்குக் கப்பல்

வடகொரிய கடலில் சரக்குக் கப்பல் கவிழ்ந்ததில் 14 மாலுமிகளைக் காணவில்லை.

ரஷ்யாவின் வடகிழக்கில் அமைந்துள்ள விளாடி வோஸ் டோக் துறைமுகத்திலிருந்து 4ஆயிரத்து 150 டன்கள் இரும்புப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சீனாவில் உள்ள குயின்டோவோ துறைமுகம் நோக்கி சென்றுகொண்டிருந்த வடகொரிய சரக்குக் கப்பல் கவிழ்ந்ததில் 14 மலுமிகளைக் காணவிலலையெனத் தெரிகிறது.

இக்கப்பலில் வியட்நாம் சீனாவைச் சேர்ந்த 8மாலுமிகள் உட்பட 18பேர் இருந்தனர். அருகே சென்றுகொண்டிருந்த மற்றொரு ரஷ்யக் கப்பல் மூழ்கிய கப்பலிலிருந்த 4மாலுமிகளுளக் காப்பாற்றியது.

(து)

## சுனாமியால் பலியானோர் எண்ணிக்கை 2இலட்சத்து 20ஆயிரமாக உயர்வு

சமீபத்தில் பல நாடுகளைத் தாக்கிய சுனாமிப் பேரலையால் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 20 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் இந்தோனேசியாவில் உள்ள சுமாத்ரா தீவு அருகே ஏறபட்ட பூகம்பம் கடல் கொந்தளிப்பாக மாறி ஆசியாவின் பெரும்பாலான நாடுகளில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

இதில் அதிகமாகப் பாதிக்கப்பட்டது இந்தோனேசியாவில் உள்ள அசே மாகாணம்தான். ஒன்றரை லட்சம் பேர் இங்கு சுனாமியால் பலியாகியுள்ளனர். பல ஆயிரம் பேரைக் காணவில்லை.

இலங்கையில் 35 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளனர். தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் 20 ஆயிரம் பேர் வரை சுனாமியில் மாண்டு போய் உள்ளனர். இந்தியாவில் நிவாரணப் பணிகள் போர்கால அடிபபடையில் நடந்து வருகின்றன.

இந்தோனேசியாவில் உயிரிழப்பும், பொருள் இழப்பும் அதிகம் என்பதால் மீட்புப் பணிகள் போதுமான அளவில் நடக்கவில்லை. எதிர்பார்த்த அளவுக்கு இன்னும் நிதியும் கிடைக்கவில்லையெனப் பொது நிவாரண அமைப்புகள் விசனம் தெரிவித்துள்ளன. (து)

WORLD NEWS
உலக தரிசனம்



பிரான்சில் நேற்றுமுன்தினம் வெள்ளோட்டம் வந்த எயார்பஸ் 380ன் ஒரு அழகுத் தோற்றம்.

## முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மேலும் 14 பட்டதாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கல்வி வலயத்திறகு மேலும் 14 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் முல்லைத்தீவு கல்விவலயத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிமனையில் இவர்கள் தங்களது நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறித்துள்ளார்.

நியமனம் வழங்கப்பட்டவர்களின பெயர் விபரம் வருமாறு,

எல்.பிரேமானந் (42,கண்டிவீதி, சுண்டுக்குளி, யாழப்பாணம்), எஸ்.சிவசிறி (90, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), கே.செல்லராசா (19, கொண்டலடி ஒழுங்கை, நல்லூர்), பி.பாலமகிந்தன் (பொறபதிவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.), வி.தயாபரன்(84/2 அரசடிவீதி, யாழ்ப்பாணம்), கே.பாலமுருகன் (186, கோவில வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), ஆர்.சிவரூபி, (சேருக்காபுலம், தெல்லிப்பழை), எம்.தக்ஷினி (முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்), கே.கோமளாதேவி (நாவற்குழி மேற்கு, கைதடி), எஸ்.சசிகலா (ஆராச்சியார் வளவு, சுதுமலை தெற்கு, மானிப்பாய்), எஸ்.சிவரஞ்சினி (தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்), எல்.கீதா, (மூளாய வதி, வடடுதெற்கு), ஜே.மோகனா (பணணாகம் தெற்கு, சுழிபுரம்), ரி.சிவதர்சினி (சிவன்மாளிகை, மாரியம்மன்வீதி, திருநெல்வேலி.

(ற)

# உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியில் ஒருவீத வீழ்ச்சி ஏற்படுமாம்

(கொழும்பு)

சுனாமி பேரலை அனர்த்தத்தால் இலங்கையில் 2005ஆம் ஆணடுக்கான உள்ளூர் உற்பத்தி வளர்ச்சியில் ஒரு வீதம் வீழ்ச்சி ஏற்படுமென சர்வதேச நாணய நிதியம் அண்மையில் மேற்கொண்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கருத்து வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின இணையத்தளம் இது தொடர்பான புள்ளி விபர அறிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கையில் 2005ஆம் ஆண்டுக்கான உல்லாசப் பயணிகளின் வருகையால் கிடைக்கும் வருமானம் 2004 ஆம் ஆண்டின் வருமானத்தை விடக் குறைந்த பட்சம் 15 சதவீத வீழ்ச்சி ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதாக உலக கடன் வழங்குநர்கள் தெரிவிக்கிறார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை முக்கிய ஏற்றமதித் துறைகளில் பாரதூரமான பாதிப்பபுக்கள் ஏற்படமாட்டாது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது முதல் இலங்கைக்காக சர்வதேச நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது மதிப்பீடு இதுவாகும்.

2005ஆம் ஆண்டு இலங்கை மீள செலுத்த வேண்டிய சுமார் 113.5 மில்லியன் டொலர் கடனை தாமதப்படுத்துவதற்கு கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது.

நாட்டின் மீன் பிடித்துறை நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. உல்லாசப் பயணத்துறை குறித்த குறுகிய காலத்துக்கு வீழ்ச்சியையே சந்திக்கும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (க-9)

# கிருமிநாசினி தெளித்தவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்தில் கிருமிநாசினி தெளித்துக் கொண்டிருந்த ஒருவர் மயங்கி விழுந்து பின்னர் மரணமடைந்துள்ளார்.

வேலணை மேற்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கோபாலபிள்ளை ஜெகதீஸ்வரன்(வயது 35) என்பவரே மரணமானவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, தோட்டத்துக்குக் கிருமிநாசினி தெளிக்கச் சென்ற பிரஸ்தாப நபர் காலில் தனது காயம் இருந்ததையும் பொருட்படுத்தாமல் மருந்து தெளித்துக் கொண்டு வந்தார். கிருமிநாசினி காயத்தில பட்டதும் அவர் மயக்கமுற்று கீழே வ்ழுந்துள்ளார்.

உடனடியாக ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் அவர் இறந்துள்ளார். பிரேத பரிசோதனைக்காக இவரது சடலம யாழ்.போதனா வைத்தியசாலையல கையளிக்கப்பட்டு,பிரேத பரிசோதனையின் பின்பு நேற்றுமுன்தினம மாலை சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந-5)

# சீருடைத் துணிகளை உடன் பெற்றுக் கொள்க!

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச சீருடைத் துணிகள் தற்போது யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சில பாடசாலைகளின் அதிபர்கள் இன்னமும் இவற்றைப் பொறுப்பேற்காமல் இருப்பதால் அவற்றை இன்று யாழ். வலயக் கல்விப் பணிமனையில் வந்து சீருடைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

துஷ்பிரயோகங்கள், வீண் விரயஙகளைத் தவிர்க்கும் முகமாக நேர காலத்துடனேயே இவற்றை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்ற பட்டதாரிகளின் விபரங்களை சரியாகப் பெற முடியாதுள்ளதாம்

## யாழ்.செயலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்.மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட அரசதுறை நியமனங்கள் தொடர்பான சரியான விபரங்களைப் பெறமுடியாதுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள தெரிவிக்கின்றன.

பட்டதாரிகள் அமைச்சினால நேரடியாக ஒவ்வொரு திணைக்களங்களுக்கும், அலுவலகங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனா.

அதாவது யாழ்.மாவட்டத்திலும் பட்டதாரிகளுக்கான நியமனங்கள் யாழ்.மாவட்ட செயலகத்தின் ஊடாக வழங்கப்படாமல் நேரடியாக வழங்கப்பட்டதனால் யாழ்.மாவட்டத்தில எத்தனை பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் எந்தெந்தத திணைக்களங்களில் நியமனங்கள் வழங்கப்படடிருக்கின்றன என்பன தொடாபான விபரங்களைப் பெறமுடியாமல் உள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-19)

# பல்வேறு நாடுகளும் இலங்கைக்கு உதவி

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மேற்பார்வை செய்வதற்கென்று வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சிலர் நேற்று முன தினமும் இலங்கை வந்துள்ளனர்.

நோர்வே சர்வதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அமைச்சர் ஹில்ட்டிவ் ஜோன்ஸனும் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நோர்வே அமைச்சர் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு விஜயம் செயயவுள்ளார்.

இதேவேளை துருக்கி அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைத் தாங்கிய விமானம ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்பு வந்தடைந்தது. இதில் சிறுவர்களுக்கான உடைகளும் மருந்துவப பொருட்களும் கொண்டுவரப்பட்டன.

இது தவிர ஸ்பெயின் நாட்டின விசேட குழுவொன்றும் நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளது. இவர்களுள் வைத்தியர்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான மேலும ஒரு கப்பல் காலித்துறை முகத்தை வந்தடைந்துள்ளது. (ந-4)

## கோரிக்கை

(துன்னாலை)


பலாலி மற்றும் மயிலிட்டி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டி நிலவன் குடியிருப்பு பகுதியில் தற்காலிகமாக வாழ்ந்து வரும் மக்கள் முன்பள்ளிக் கல்விக் கூடம் ஒன்றை அபபகுதியில் அமைத்து தருமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இப்பகுதியில் குடியிருக்கும் குடும்பங்களில் சுமார் 25 வரையான சிறார்கள் பாலர் கல்விக்கான வசதியின்றி இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ப-101)

# ஆஸி.ஓபன் டெனிஸ் 2 ஆவது சுற்றில் வீனஸ் வில்லியம் நேர் செட்களில் வெற்றி

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் பிரிவல் வீனஸ் வில்லியம்ஸ், டேவன்



போர்ட் அபாராமாக ஆடி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர். ஆணகள் பிரிவில் லேடன்ஹெவிட்டிம் ஹென்மேன் இராண்டாவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் பேர்ன் நகரில நடைபெற்றுவருகின்றன. இரண்டாம சுற்றுப் போட்டிகள் நேற்று முன் தினம் நடந்தன. முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன்போர்ட், செக்குடியரசின் மைக்கேலா பாஸ்டிகோவாவை எதிர்த்து விளையாடினார்.

முதல் செட்டில் டேவன்போர்ட அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். ஆனாலும் சுதாரித்து ஆடிய டேவன்போர்ட் அடுத்த இரண்டு செட்களையும் எளிதில் கைப்பற்றினார். இவர் 2-6,6-2,6-2 என்ற செட்களில் பாஸ்டிகோவை வீழத்தி மூனறாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் எட்டாம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், சீனாவின் பெங்சாயைச் சந்தித்தார். அபாரமாக விளையாடிய வீனஸ் 6-3, 6-1 என்ற நேர செட்களில் வெற்றி பெற்றார்.

ரஷ்யாவின் முன்னணி வீராங்கனைகளான அனஸ்டாசியா மிஸ்கினா, எலீனாடெமன்டிவா, தாதியானா பனோவா ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன்



னேறினர். மிஸ்கினா 6-4,6-2 என்ற செட்களில் இஸ்ரேலின் ஸிபோரா ஆப்ஸிலரையும், தாதியானா 3-6,6-4,6-2 என்ற செட்களில் செர்பயாவின் ஜெலீனா ஜன்கோவிக்கையும், டெமன்டிவா 6-2, 6-1 என்ற செட்களில் சக நாட்டு வீராங்கனையான அன்னா சக்வெடாட்சியையும் வீழ்த்தினர்.

கடந்தமுறை காலிறுதி




வரை முன்னேறிய தாதியானாகலோவின் 5-7, 1-6 என்ற செட்களில் அமொரிக்காவின் அபகைல் ஸ்பயர்விடம் தோல்வ அடைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாம் நிலை வீரர் அவுஸ்திரேலியாவின் ஹெவிட், அமெரிக்காவின் ஜேம்ஸ் பிளாக்கை சந்தித்தார். முதல் செட்டை பிளாக் வென்றாலும், ஹெவிட்டின் அபார ஆட்டத்தின் முன் அடுத்தடுத்த செட்களில் அவரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இறுதியில் ஹெவிட் 4-6, 7-6, 6-0, 6-3 என்ற செட்களில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். (ந)

## விளையாட்டு செய்திகள்

# தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது ஐ.சி.சி




(புதுடில்லி)

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிகெற் போட்டிகளின் தரவரிசைப பட்டியலை சர்வதேச கிரிக்கெற கவுன்சில்(ஐ.சி.சி.) வெளியிட்டுள்ளது.

இதற்கு அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் உள்ளிட்ட வீரர்கள் பலத்த வரவேற்புத் தெரிவித்துள்ளனர்.

அப்பட்டியலில் முதலிடத்தில் உள்ள அவுஸ்திரேலிய அணிக் கப்டன் ரிக்கி பொண்டிங், உலக தரவரிசை அனைத்தும் தற்போது ஒரே அமைப்பின் கீழ, அதுவும் அங்கீகாரத்துடன் வெளியிடபபடுகிறது.

கிரிக்கெற் வளர்ச்சிக்கு இது மேலும் உதவும். மற்ற நாடுகளுடன் தரத்தை ஒப்பிடுவதற்கு இப்பட்டியல் உதவுவதால், எமது வீரர்கள் பலர் அபபட்டியல் மீதே எப் போதும் பார்வையை வைத்துள்ளனர்.

அப் பட்டியலால் அணி மற்றும் வீரர்கள் தங்களது திறனை மேம்புடுததிக கொள்ள வாய்ப்பு கிடைககிறது. மொத்தத்தில் கிரிக்கெற் ஆர்வலர்கள் உலகில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள அப் படடியல் வழிகை செய்கிறது எனக் குறிப்பிடார்.

பொண்டிங்கின் பெரும்பாலான கருத்தையே தென்னாபிரிக்காவின் ஜக்கஸ் காலிஸூம் கூறியுள்ளார். இவர் வீரர்கள தரவரிசைப் பட்டியலில் இராண்டாமிடத்தில் உள்ளார்.

வீரர்களின் நிலை, டெஸ்ட் மற்றும் ஒருநாள் குழு சம்பியன் தரவரிசை ஆகியவற்றை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. எல்ஜி நிறுவனத்தின் ஆதரவில் ஐ.சி.சி. இபபணியை மேற்கொண்டுள்ளது.

இந் நிகழ்ச்சியில், இந்திய அணியின் கப்டன் சௌரவ் கங்குலி, முன்னாள் கப்டன்கள் காவஸ்கர், ஸ்ரீகாந்த் ஆகியோரும் பங்கேற்றனர். (ந)

# மக்களின் தீர்மானப்படி பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவது அரச அதிகாரிகளின் பொறுப்பு

## சுனாமி அழிவிலிருந்து மீன்பிடித் துறையை மீட்க இதுவே வழி என்கிறார் சூசை

(மருதங்கேணி)

**ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக யாழ்.மாவட்டத்தின் மீன்பிடித்துறையே முற்றாக அழிந்துள்ள நிலையில் அதனை சரியான முறையில் எல்லோரும் இணைந்து கட்டியெழுப்ப வேண்டும் என கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.**

நேற்று மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1983 இற்கு முன்னர் யாழ்.மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஐயாயிரத்திற்கு மேற்பட்ட மீனபிடி படகுகள் இருந்துள்ளன. அத்தோடு 14 மீன்பிடி வலயங்களாக யாழ்.மாவட்டம் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் 9வலயங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கில் 3,899 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடித்துறைகள் அழிக்கப்பட்டுள்ளன என யாழ் பல்கலைக்கழக புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

கடந்த காலங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவே தவிர யுத்த சூழ்நிலையை காரணம் காட்டி எந்தவித அபிவிருத்திப் பணிகளும் நடைபெறவில்லை. ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக முற்றாக அழிவடைந்து போயுள்ள மீன்பிடித்துறையை எல்லோரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்ப வேண்டும். வடக்கு-கிழக்கு மீன்பிடித்துறையை பொறுத்தவரையில் தற்பொழுது உள்ள அழிவுகளை வைத்துகொண்டு முடிவு எடுக்க முடியாது. 1983 ஆம் ஆண்டு மீன்பிடித்துறை எந்த நிலையில் இருந்ததோ, அதே போன்று 2004 ஆம் ஆண்டு இங்கு யுத்தத்தை காரணம் காட்டி எமது மக்களின் வாழவாதாரத்தை இழிநிலைக்குக் கொண்டுபோக முடியாது. அதாவது பாரம்பரிய தொழில்முறையை தொடராது தற்போது தென்னிலங்கையில் உள்ள தொழில்முறைக்கு மாற்ற வேண்டும். இதற்கு யுதத்தை காரணம் காட்டக் கூடாது. இதற்கும் யுத்தத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது.



மக்களுடைய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அழிந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியபொறுப்பு அரச அதிகாரிகளுக்கு உண்டு.

இதனைக் கருத்திற் கொண்டு மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்கான உறுதிப்பாடுகளை செய்ய வேண்டும். அதாவது கரையில் இருந்து 100 மீற்றர் உயரத்திற்கு தடுப்பு அணைகள் அமைக்கப்பட வேண்டும்.

மீன்பிடியை வளப்படுத்தும் நோக்கில் படகுகளையும் வலைகளையும் வழங்கினால் மட்டும் போதாது. நீண்ட நோக்கைக் கருத்தில் கொண்டு பொருத்தமான மீன்பிடிப் படகுகள், படகு கட்டும் நிலையம், சந்தை வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும. ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு மீட்புப்பணி நடவடிக்கைகளுக்கோ, இறந்தவர்களின் உடல்களை மட்டெடுப்பதற்குரிய நடவடிக்கைகளுக்கோ அல்லது அவர்களை பாதுகாப்பாகக் கொண்டு நகர்த்த வேண்டிய நடவடிக்கைகளுக்கோ எவரும் முன்வரவில்லை.

யுத்த காலத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட சகல படையணிகளும் மக்களும் தான் இந்த மீட்புப்பணிகளை மிக விரைவாக செய்து முடித்துள்ளனர்.

இந்த மீட்புப்பணிகளை எவ்வளவு விரைவாக செய்து முடித்துள்ளோமோ அதேவேகத்தில் தான் புனரமைப்பு செயற்பாடுகளும் அமைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ப-4)

# நிவாரணப் பொருட்களை மோசடி செய்வோருக்கு எதிராக நடவடிக்கை

## எடுக்கப்போவதாக எச்சரிக்கிறார் திலக் ரணவிராஜா

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கான நிவாரணப் பொருட்களை மோசடி செய்யும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக தராதரம் பார்க்காமல் கடும் நடவடிக்கை எடுக்க தான தயங்கப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

முதல கட்டமாக நிவாரணப பொருட்களை மோசடி செய்த பல அமைச்சர்களைச் சேர்ந்த அதிகாரிகள் தொடர்பாக விசாரணை நடத்தப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

முபபடை அதிகாரிகளும், பொலிஸாரும் சுனாமி அனர்த்தத்தால பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருவதாகக் குறிப்பிட்ட அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக்ரணவிராஜா, அவர்களில் சிலரும் இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டிருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக மேலும் தெரிவித்தார்.

(க-9)

# அஞ்சலி செய்கிறோம்



கடந்த புனித கிறிஸ்மஸ் தினம் அதிர்ச்சியைத்தான் தந்தது உங்கள் மரணச் செய்தி கேட்டுத்தான் கடல் அன்னையும் அதிர்ந்து விட்டாளோ!

நாங்கள் உங்களுடன் கொழும்பில் சில் காலம் தங்கியிருந்த வேளை உங்களின் பல முகங்களைக் கண்டோம்.

நல்ல ஒரு தாயாக! நல்ல ஒரு தோழியாக!

நல்ல ஒரு வழிகாட்டியாக! நல்ல ஒரு ஆலோசகராக!

நல்ல ஒரு சாரணர் தலைவியாக!

நல்ல ஒரு ஆசிரியையாக!

இப்படி எத்தனையோ முகங்கள்!

இனி நாம் வரும்போது உங்களைக் காணமுடியாதே என எண்ணும்போது மனம் அழுகிறது!

இன்று(22~1.2005~சனிக்கிழமை)தாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக உள்ள திருமதி P.M.இராசரத்தினம் அவர்களின் வீட்டில் நடைபெறும் சாந்திப் பிரார்த்தனையில் நாமும் மனத்தால் கலந்து கொள்கிறோம்.

**அமரர் ஜெயநந்திதேவி குணரத்தினம் அவர்கள்**

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியையும் சாரணர் தலைவர் பயிற்றுநர்)

இங்ஙனம்.
இராசரெத்தினம் இந்திரகுமார்,
இந்திரகுமார் கலைமதி,
இந்திரகுமார் அவிநாஷ்,
லண்டன்.

(9238)

# நிவாரண உதவிகளை உடன் வழங்கக்கோரி

# திருகோணமலையில் வீதிமறியல் போராட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை திருக்கடலூர்ப் பகுதியில் சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு நிராதரவான நிலையில் உள்ள குடும்பங்கள் தங்களுக்கான நிவாரண உதவிகள் உடனடியாக வழங்கப்படவேண்டுமெனக் கோரி வீதிமறியல் போராட்டத்தினை மேற்கொண்டனர்.

இந்த வீதிமறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

சுனாமி இடம்பெற்று மூன்று வாரம் கடந்துவிட்ட நிலையிலும் உரிய நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்காலிக குடியிருப்புக்கான கூடாரத்துணிகள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மாவும், சமையல் பாததிரங்கள், விளக்குகள், பாய்கள் போன்றவற்றை உடனடியாக வழங்குமாறும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்த மறியல் போராட்டம் 3 மணித்தியாலங்கள் வரை தொடர்ந்து நீடித்தது.

இடைக்கிடையே பலத்த மழை பெய்த போதிலும்கூட மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட எவரும் வீதியை விட்டு நகரவில்லை. நண்பகல் அங்கு சென்ற அதிகாரிகள் இவர்களின் கோரிக்கையினை கேட்டறிந்துகொண்டனர்.

உடனடி நிவாரண உதவியாக இவர்களுக்கான அரிசி, மற்றும் மரக்கறிகள் என்பனவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கூடாரங்கள் மற்றும் ஏனைய தேவைகளை வழங்குவதாகவும் உறுதியளித்தனர்.

இந்நிலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர் தங்கள் போராட்ட நடவடிக்கைகளைக் கைவிட்டு வீதியினைவிட்டு விலகிச்சென்றுள்ளனர்.

உறுதியளித்ததன் பிரகாரம் உரிய பொருட்களை வழங்காது போனால் மீண்டும் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி ஏற்படும் என இவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ப-04)

## நூல்கள் அனுப்பிவைப்பு

(கொழும்புத்துறை)

லண்டனில் இருந்து ஒரு தொகை நூல்கள் யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

லண்டனில் வாழ்கின்ற பல தரப்பினரிடமும் இருந்து சேகரிக்கப்பட்ட அரிய நூல்களையே முன்னாள் நூலகர் என்.செல்வராஜா இவ்வாறு அனுப்பி வைத்துள்ளார். (ப-51)

## புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் இப்பூங்கா திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-51)

### சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான

## அடுத்துவரும் 6 மாதகாலப் பயன்பாடுகளுக்கு

# 86ஆயிரம் தொன் உணவுப் பொருட்கள் தேவை

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு புரதச்சத்துள்ள உணவுகளை வழங்க முக்கியத்துவம் அளிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுகுறித்த நடவடிக்கைகளை தேசிய இயக்க வேலைக்ளுககான நிலையம் மேற்கொள்ளும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் உதவி வழங்கும் முகவர் நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளையும், உணவு விநியோகத்தில் ஈடுபட்டுள்ள தனி நபர்களின் நடவடிக்கைகளையும் தற்சமயம் ஒன்றிணைக்கும் வேலையில் இந்த தேசிய இயக்க நடவடிக்கைக்கான நிலையம் ஈடுபட்டுள்ளது.

மகப்பேற்றை எதிர்கொள்ளும தாய்மார்கும் சிசுக்களைப் பராமரித்து வரும் தாய்மாருக்கும, கைக்குழந்தைகளுக்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டு இந்த உணவுவகைகள் வழங்கப்படும்.

இதற்காக உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்ப நடவடிக்கைக்காக 5 ஆயிரதது 300 மெற்றிக்தொன் அரிசி, சீனி, பருப்பு, கோதுமை மா ஆகியவற்றை வழங்கியுள்ளது.

இதில் 80 சதவீதம் வடகிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் அரசு தெரிவித்தது.

எஞ்சிய 20 சதவீதமும் தெற்கில் உள்ளவர்களுக்காக அனுப்பப்பட்டுள்ளன. காய்கறிகள், பழவகைகள், விலங்குப் புரதம் என்பன உட்பட உணவு வகைகளை தேசிய இயக்க நடவடிக்கை நிலையம் அனுப்பியுள்ளது.

அடுத்த 6 மாதங்களுக்கும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 10 இலட்சம் மக்களுக்கு 84 ஆயிரம் மொற்றிக் தொன் உணவு தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளுக்கும நிறுவனங்களும் பெருந்தொகையான தானியவகை உணவுகளை வழங்க முன்வந்துள்ளது. (ப-4)

# நோர்வே தூதுக்குழுவினருடன் முஸ்லிம் காங்கிரஸ் குழு சந்திப்பு

### மீள்கட்டுமான நடவடிக்கைகள் பற்றி ஆராய்வு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புகின்ற அரசின் செயற்திட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் பங்களிப்பினை வழங் குவதற்கான யோசனைகள் பற்றி சறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் குழுவினா, நோர்வே அரசின் தூதுக்குழுவிடம் விளக்கியுள்ளார்கள்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூவ் ஹக்கீம் தலைமையிலான குழுவினா நேற்று முன்தினம் மாலை நோர்வேத் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசிய போது இது குறித்து விளக்கமளித்துள்ளனர்.

இந்த சந்திப்பில் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்டா ஜோன்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் கெல்கீசன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டார்கள்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும்போது பிரதேச மக்களோடு கலந்துரையாடப்படவேண்டுமென்று இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு அபிவிருத்தி நடவடிககைகளின்போது பிரதேச மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைகளுடனும் கட்சிகளோடும் கலந்துரையாடப்படவேண்டுமென்றும் யோசனைகள் முன்வைககப்பட்டிருப்பதாக சிறிலங்கா முஸ்லிம காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்துறையில் நிபுணத்துவம் பெற்ற நாடு என்ற வகையில் நோர்வேயிடம் மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை விளக்கியுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தெரிவித்தார். (ப-4)

### இலங்கைக்கு உதவி வழங்குவதற்கான

## நிதிசேகரிப்பு கிரிக்கெற் போட்டி

# கிறைஸ்ட்சர்ச்சில் இன்று ஆரம்பம்

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு நிதியுதவி வழங்குமுகமாக நிதி சேகரிப்புக்காக நடாத்தப்படவுள்ள உலக லெவன் மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி இன்று சனிக்கிழமை கிறைஸ்ட்சர்ச நகரில் ஆரம்பமாகவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையை சீரமைக்க 3கோடி ரூபா நிதியளிக்க நியூசிலாந்து உறுதியளித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலைத் தொடர்ந்து, சுனாமி நிவாரண நிதிக்காக நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகமும் போட்டிகளை நடத்துகிறது.

இந்தப் போட்டியின்மூலம் கிடைக்கும் நிதி அனைத்தும் இலங்கைக் கிரிக்கெட் சபை மற்றும் வேர்ல்ட் விஷன் அமைப்புகளுககு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. உலக லெவன அணியில் இலங்கையின் முன்னணி வீரர்களான முததையா முரளிதரன, சனத்ஜெயசூர்யா, சமிந்தவாஸ் மற்றும் குமார் சங்ககார அகியோர் பங்கேற்கின்றனர்.

நியூசிலாந்து கிரிக்கெட் வீரர்கள சங்கத்தின் நிர்வாக இயக்குநர் ஹீத் மில்ஸ் இது பற்றி கூறுகையில்,

'இந்தத் தொடர்மூலம் 3கோடி ரூபாவிற்கும் அதிகமாக நிதி திரட்ட முடியும் என்று நம்புகிறோம். இந்தத் தொகையைக் கொண்டு சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இலங்கையின் மாதிரி கிராமங்கள் அமைப்பது எங்கள் திட்டம். குறைந்தது 4 கிராமங்களாவது அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். அதற்கு இன்னும் நிறைய நிதி தேவைப்படும். நிச்சயம் எங்களால் நிதியைத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது' என்றார்.

போட்டிகள் இடம்பெறும் நாடும், இடங்களும் வருமாறு,

ஜன -22, முதல்போட்டி கிறைஸ்ட்சர்ச், ஜன -24, இரண்டாம்போட்டி வெலிங்டன், ஜன 26, மூன்றாவது போட்டி காமிள்டன். (ற)


HUDEC

## Job Announcement for Jaffna and Mullaitivu District

**HUDEC (Human Development Centre) a social & charitable organization based in Jaffna, with 3 sub – offices in vadamaradchi, Maruthankerny and Mullaitivu announces posts on a contractual basis for the below mentioned departments. The posts will be stationed in the above mentioned districts.**

**Management:**

- **I Project Manager, responsible for the overall coordination of the Tsunami Relief and Rehabilitation Programme. This post will be based in the Maruthankerny HUDEC Caritas sub-office.**
  *Qualification:* **Masters Degree in Social Science, Management or related subjects.**
  *Experience:* **Minimum of 4 years in relief and rehabilitation work.**

- **I Personnel and Administration Manager responsible for coordination of the Personnel and Administration Department of the Tsunami Relief and Rehabilitation Programme based in Jaffna**
  *Qualification:* **Degree in Administration, Management or related subjects**
  *Experience:* **Minimum of 4 years relevant experience**

**Finance:**

- **Finance Manager to be based in Jaffna and responsible for the overall financial management of the Tsunami Relief and Rehabilitation Programme.**

- **4 Finance Officer posts to be based in Jaffna, Vadamaradchi, Maruthankerny and Mullaitivu HUDEC Caritas offices.**
  *Qualification:* **Accounting Degree and / or any professional qualification in Accounting.**
  *Experience:* **Minimum 2 to 8 years depending on the post.**

**Logistics:** **The posts include I Logistics Manager to be based in Jaffna and 4 Loigistics Officer posts to be based in Jaffna, Vadamaradchi, Maruthankerny and Mullaitivu HUDEC Caritas offices.**
*Qualification:* **Degree in Logistics and / or any Professional qualification or equivalent experience in logistical management.**
*Experience:* **Minimum 2 to 5 yeas depending on the post.**

**Programmes:** **The posts include several Field Officer posts and 3 technical officer posts for the Tsunami Relief and Rehabilitation Programme based in jaffna, Vadamaradchi, Maruthankerny and Mullaitivu HUDEC Caritas offices.**
*Qualification:* **Degree in social science, managment or related subjects and / or relavant professional experirnce in Relief & Rehanilitation work.**
*Experience:* **Minimum 2 to 5 years depending on the post.**

**Interestd candidates should submit their detailed CV along with supporing documents and references to the address given below. Please send the CV on or before 29.01.2005.**

*Postal Address:* **Director, HUDEC Caritas, PO Box 2, Bishops House, Jaffna.**
*Office Address:* **Deogu Street, No 14 Mathew's Road, Jaffna.**
*Tele/Fax:* **+94 (0) 21 222 2571 / 2227314**
*Email:* **hudec@sltnet.lk**
**www.hudecjaffna.org**

# முடங்கிக்கிடக்கும் வழக்குகளை விசாரணை செய்ய நடவழக்கை

(கொழும்பு)

நீதிமன்றங்களில் பாரிய குற்றங்கள் தொடர்பிலான வழக்குகள் விசாரணை ஏதுமின்றி தேங்கிக் கிடப்பதைத் தடுப்பதற்காக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

இதற்கான பரிந்துரையினை சொலிசிஸ்ரர் ஜெனரல் மேற்கொண்டிருக்கின்றார். சட்டமா அதிபரும் இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இதன்படி பாரிய குற்றச்செயல்கள் மாவட்ட நீதிமன்றங்களிலோ அல்லது நீதிவான் நீதிமன்றங்களிலோ விசாரணை செய்யப்படாது நேரடியாக மேல் நீதிமன்றங்களில் விசாரணை செய்யப்படவிருக்கின்றன. (ப-4)

# உவர்நீராக மாறிய கிணறுகள் சுத்திகரிக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

குடததனை, மணற்காடு போன்ற பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட சுனாமியினால் அப்பகுதியில் உள்ள நன்னீர்க் கிணறுகள் யாவும் உவர்த்தன்மையாக மாறி வருகின்றன.

இந்நிலைமையை மாற்றும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை இப்பிரதேச மக்களின் நலன்கருதி இக்கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணியில் இறங்கியுள்ளது.

இவர்களின் முதற்பணியாக இப்பகுதியில் உள்ள நன்னீர்க் கிணறுகளை இனங்கண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டு கிணற்றிலுள்ள முழு நீரையும் வெளியேற்றும் நடவடிக்களை இக்குழுவினர் தற்சமயம் மேற்கொண்டு வருகின்றனர்.


தற்போது அப்பிரதேசத்தில் தரைக்கீழ் நீர் எந்த நிலைமையில் இருக்கின்றது என்பது பற்றி அவர்கள் ஆய்வுசெய்து வருகின்றனர். (ற-5)

# கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன

(கோப்பாய்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து மருதங்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. (ப-79)



சுனாமியால் பாதிப்படைந்துள்ள வடமராட்சி சுப்பர் மடத்தில் மீனவர்களின் மீன்பிடிப் படகொன்று பாரம்தூக்கியின் உதவியுடன் கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.



திக்கம் சித்தி விநாயகர் நலன்புரி முகாமிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவா லங்கா பணிப்பாளர் ஆனந்தராஜா நிவாரணப் பொருட்களை வழங்குகிறார்.



தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்திலுள்ள 185 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரிடம் நிவாரணப் பொருட்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் புழுங்கல் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2005 ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | 2005 ஜனவரி (MT) | 2005 பெப்ரவரி (MT) | 2005 மார்ச் (MT) |
| 1 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 2 | கைதடி | 70 | 70 | 70 |
| 3 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 4 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 5 | கட்டைவேலி | 45 | 45 | 45 |
| 6 | நெல்லியடி பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 7 | புலோலி | 27 | 27 | 27 |
| 8 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டைத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பழை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 | 2500 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ, அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.01.20 ஆம் திகதி தொடக்கம் 2005.02:07 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரைபெற்றுக் கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத் தில செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர் வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 08.02.2005 பி.ப.2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் 'புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி' என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுககு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித்திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

க. கணேஷ்,
தலைவர் / அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.
20.01.2005

(C/1013)

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும் - குறள்

வலம்புரி

# நோர்வேக் குழுவின் வருகை முக்கிய திருப்பத்தைத் தருமா?

நோர்வேயின் உயர்மட்டக் குழுவொன்று இலங்கைக்கு வருகை தந்துள்ளது. அரசு - புலிகளுக்கிடையில் சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்துவதில் முனைப்புடன் செயலாற்றிவரும் நோர்வே அரசின் முயற்சி காரணமாகவே இலங்கையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டது எனலாம். சிறிய நாடான இலங்கையில் மனித உயிர்களைக் காவு கொண்ட கொடிய யுத்தம் இலங்கையின் இருப்பையே கேள்விக் குறியாக்கியுள்ளது.

இந் நிலையில், நோர்வே அரசு இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஓர் சமாதான உறவை ஏற்படுத்துவதில் அனுசரணையாளராக செயற்பட்டு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதில் வெற்றியும் கண்டது.

20 வருட காலமாக இடம்பெற்றுவரும் யுத்தம் ஆயிரக்கணக்கான மனித உயிர்களை பறித்தெடுத்துவிட்டது. இத்துயரம் தொடர்கதையாகும் சந்தர்ப்பத்தில் நோர்வே அரசு மனித நேயத்துடன் தலையிட்டு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

இது விடயத்தில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோலின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு எந்தவித உள்நோக்கமும் இன்றி சமாதான அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேக்கு, ஜே.வி.பி, சிஹல உறுமய போன்ற சிங்கள இனவாதக் கட்சிகள் வழங்கிய கௌரவம் எத்தகையதென்பதை உலகம் நன்கு அறியும்.

இருந்தும் இலங்கையில் அநியாயமாக அழிக்கப்படும் மனித உயிர்களைக் காப்பாற்றும் பணி என்ற மனநிறைவோடு நோர்வே அரசு தனது சமாதான முயற்சியை தளர்வின்றி மேற்கொண்டது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தி, சமாதானப் பேச்சுக்களையும் ஆரம்பித்த நோர்வேக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்து கொண்ட முறைமைகள் அதிர்ச்சியையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியிருந்தன.

ஆயினும் ஒரு நாட்டின் அரசியல் அமைப்பில் தலையிடுவது தமக்குரியதல்ல என்ற உயர்ந்த எண்ணப்பாட்டில் அதுபற்றி எதுவும் அலட்டிக் கொள்ளாது மீண்டும் சமாதான முயற்சியை மேற்கொள்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் நோர்வேயின் சமாதானக் குழு பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியபோதிலும், அது எந்தவித அசைவும் இல்லாமல் இருந்தமை நோர்வேக்கு சலிப்பை ஏற்படுத்தியதென்றே கூறவேண்டும்.

சமாதான முயற்சியின் வெற்றிக்கு நீண்டகாலம் எடுக்கலாம். இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்பது உடனடிச் சாத்தியமான விடயம் அன்று. இவ்வாறு நோர்வேயின் சமாதானத் தூதுவர்கள் அறிக்கைவிட்ட நிலையில் "சுனாமி"யின் தாக்கம் இலங்கையில் உயிர் - உடைமை அழிவுகளை ஏற்படுத்தியது. உலக நாடுகளின் இரக்கத்தைப் பெறும் அளவில் சுனாமியின் தாக்கம் உச்சம் பெற்ற நிலையில் - அந்தத் தாக்கத்திலிருந்து இன்னமும் மக்கள் விடுபடமுடியாதிருக்கின்ற வேளையில் நோர்வேயின் உயர்மட்ட சமாதானக் குழு இலங்கைக்கு வருகை தந்துள்ளது.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திய நோர்வேயின் உயர்மட்டக் குழு இன்று விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுக்களை நடத்துகின்றது.

சுனாமியின் தாக்கத்திலிருந்து விடுபட எத்தனிக்கும் மக்களுக்கு நோர்வேயின் சமாதான முயற்சி புதிய திருப்பத்தைத் தருமாயின் அது நல்லதோர் சூழ்நிலையாக அமைவது உறுதி.

# பின்னடைவை நோக்கிச் சென்ற நாடு கடந்த ஒரு வருடத்தில் முன்னேறியுள்ளது

## கூட்டமைப்பு அரசு திறமையுள்ளதென அமைச்சர் மைத்திரிபால சிறிசேன புகழாரம்

கடந்த 12மாத காலப்பகுதியில் ஊழல் மோசடிகளைக் குறைக்க முடிந்திருக்கின்றது. இதனைக் கூட்டமைப்பு அரசாங்கம் வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாகவே கொள்ளமுடியும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணி அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறிய குறுகிய காலப்பகுதியில் இலங்கையில் ஏற்படட நல்ல மாற்றங்களை பொதுமக்கள் உணர்ந்திருக்கின்றார்கள் என அவர் தெரிவித்தார்.

பின்னடைவு நிலையை நோக்கிச்சென்றுகொண்டிருந்த நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியை கணிசமான அளவு முன்னோக்கிக் கொண்டுவர அரசாங்கத்தால் முடிந்திருக்கின்றது.

கடந்த ஒருவருட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்து, அனைத்து சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் எமது அரசாங்கத்திற்கு உண்டு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# இலங்கையின் மீள்கட்டுமானத்திற்கு யு.என்.எச்.சி.ஆர் தொடர்ந்தும் உதவும்

## ஒரு கோடியே 53இலட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கப்போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, உறைவிடம், சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுத்து பெண்களையும் சிறுவர்களையும் பேணிக்காக்கப் போவதாக அமைப்பின் உதவி உயர்ஸ்தானிகர் கமால் மொறியானிஸ் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பல பிரதேசங்களுக்கு சென்று திரும்பிய பின்னர் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்களைச் சந்தித்தபோது, படையணியில் சேர்ந்து போரிடுவதற்காக சிறுவர்களை சேர்ப்பதாகத் தெரிவிக்கப்பட்ட ஊடக அறிக்கைகள் நிராகரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் சிறுவர்களை சேர்ப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐ.நா.அகதிகள் உயர்ஸ்தானிகராலயததின் மற்றுமொரு உயர் அதிகாரியான எரிக்கா பெலர் இங்கு குறிப்பிட்டார்.

அவ்வமைப்பின் இலங்கைக்கான விடயங்களை ஒருங்கிணைக்கும் நீல் றைற் கருத்துத் தெரிவிக்கும்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒருகோடி 53இலட்சம் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தொிவித்தார்.

(ப-4)

# போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களையும் மீளக்குடியமர்த்துமாறு ஐ.நா.கோரிக்கை

## வொய்ஸ் ஒ·ப் அமெரிக்கா செய்தி வெளியீடு

உள்நாட்டு போரினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களையும், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீளக்குடியமர்த்தல் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்குப் பொறுப்பான ஸ்தாபனம் ஸ்ரீலங்கா அரசினை கேட்டுள்ளது என வொய்ஸ் ஒ·ப் அமெரிக்கா நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஸ்தாபனத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் மோர் ஜேன் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்து பார்வையிட்ட பின்னரே இக் கோரிக்கையினை கொழும்பில் கடந்த புதன்கிழமை அவர், ஸ்ரீலங்கா அரசிற்கு விடுத்துள்ளார். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலான வர்கள் தமிழ்மக்கள் எனவும் உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்த இவர்களே மீண்டும் ஆழிப்பேரலையினால் இடம்பெயர வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளானார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக் கோரிக்கை பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரினாலும், சுனாமி அலையினாலும் பாதிக்கப்பட்ட மக்களை சமகாலத்தில் இணைத்து மீளக்குடி யமர்த்தும் பணிகளில் ஈடுபட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 20 வருடகால யுத்தத்தில், கிட்டத்தட்ட 80,000 மக்கள் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளதாகவும், அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வடக்கு-கிழக்கு பிரதேசங்களிலுள்ள நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளதாக வொய்ஸ் ஒ·ப் அமெரிக்கா மேலும் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

(ற)

# சுனாமியால் பலியானவர்களின் 31 ஆவது நாள் நினைவு தினம்

(கொழும்பு)

சுனாமி கடல் அலை தாக்கத்தினால் பலியானவர்களின் 31 ஆவது நினைவு நாளான எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமையன்று நாடளாவிய ரீதியில் சர்வமதப் பிரார்த்தனைகளும், விசேட சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பௌத்த, தமிழ்,முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அலைத் தாக்கத்தினால் 38 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளமை தெரிந்ததே.

இவர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டியும் இவர்களை நினைவுகூரும் வகையிலுமே இந்த நிகழ்வுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை பாரிய அளவில் பௌத்த விகாரைகள், பள்ளிவாசல்கள் மற்றும் இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் இந் நிகழ்வு இடம்பெறவுள்ளன.

அதேபோன்று 26 ஆம் திகதி முல்லைத்தீவிலும் சர்வமதப்பிரார்த்தனைகள் மற்றும் சமய சடங்குகளை நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவவாறு ஒவ்வொரு மாவட்டங்களிலும் சுனாமி அலையினால் பலியானவர்களின் 31 ஆம் நாள் நினைவு தினம் (26 ஆம் திகதியன்று) உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

(க)

# பல்கலைக்கழகத்திற்கு 2 ஆயிரம் பேர் அனுமதி

(கொழும்பு)

அடுத்த கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதியின்போது மேலதிகமாக 2ஆயிரம் மாணவர்களை சேர்த்துக்கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

இம்முறை பல்கலைக்கழக மாணவர்களை சேர்த்துக்கொளவதற்காக 2 அனுமதிப் பரீட்சைகள் நடைபெறவிருப்பதாக குறிப்பிட்ட மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் சுனாமியால பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக தனியான அனு மதிப் பரீட்சை நடாத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

கல்விப பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவித்த அவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களுக்கான பரீட்சை யூன் மாதத்தில் நடைபெறும் என்றும் மேலும் தெரிவித்தார்.

(க-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இயற்கையின் குரலுக்கு ஏவலர்களாக நிற்கிறோம நாம். வெளியில் ஓசை எழுந்தால் அதைக் கேட்க வேண்டும். ஏதாவது நிகழ்ந்தால் அதைப் பார்க்க வேண்டும். குரங்குகளைப் போல இருக்கிறது நமது நிலமை. இரண்டாயிரம் குரங்கள் ஒன்று சேர்ந்தால் அதுவே நாம். நாம் ஒவ்வொருவரும் அப்படியே எதிலும மூக்கை நுழைப்பவை குரங்குகள். நம்மாலும் சும்மா இருக்க முடியாது. ஆனால் அதற்கு 'இன்பம் அனுபவிப்பது' என்று பெயர் சூட்டிக்கொள்கிறோம் நல்ல வேடிக்கை.

சுவாமி விவேகானந்தர்

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்

## அனர்த்தகால உளநலப் பணிக்குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் உயிர்ச்சேதங்களையும் பொருட்சேதங்களையும் சந்தித்து பாதிக்கப்பட்ட மக்கள் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுவதாக அனர்த்தகால உளநலப் பணிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அனர்த்தகால உளநலப்பணிக் குழுவினர் எதிர்கால திட்டஆலோசனைகள் பற்றிய பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நேற்றுக் காலை சாந்திக மண்டபத்தில் நடைபெற்றது.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ்.பல்கலைக்கழக உள மருத்துவத்துறையின் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம், யாழ்.பொதுவைத்தியசாலை, தெல்லிப்பழை வைத்தியசாலையின் உள மருத்துவர் வைத்திய கலாநிதி சா.சிவயோகன் அகவொளி இயக்குநர் வண.பிதா இராசநாயகம், வைத்தியகலாநிதி சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தார்கள்.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் நீண்டகால நோக்கில் ஆற்றவேண்டிய உளநல சமூக வேலைத்திட்டங்கள் பற்றியும் அனர்த்த பிரதேசங்களில் ஆற்றப்படும் உளசமூக வேலைத்திட்டங்களை பொதுக் கட்டமைப்புக்குள் கொண்டு வருதல். உள சமூக வேலைத் திட்டங்களில் ஈடுபடும் அலுவலர்கள், பணியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய உத்திகள், உளசமூக பிரச்சினைகளுக்கும் உளப்பிரச்சினைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவிக்கையில், கடந்த போர் சூழ்நிலையில் ஆண்கள் கொல்லப்பட்டார்கள். இதனால் விதவைகளின் தொகை அதிகரித்து காணப்பட்டிருந்தது. ஆனால் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் இறந்தவர்களில் பெரும்பான்மையினர் பெண்களும் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இதனால் மனைவி, பிள்ளைகளை இழந்த பல ஆண்கள் அந்த இழப்பை தாங்கமுடியாது மது அருந்துகின்றார்கள் என இக் குழுவினர்கூறினர். இதுபோன்று மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் ஒன்றாக வாழ்ந்து வருவதனால் கட்டிளமைப்பருவத்தில் பல இளைஞர்களுக்கு பல பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகின்றது. அவர்களுக்கு விளக்கமளித்து இச்செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பதற்கேற்ற வகையில் எமது குழு செயற்பட்டு வருகின்றது.

உறவுகளை இழந்து பலர் இருப்பதனால் அவர்கள் இறந்து போன தமது உறவுகளை நினைத்து தற்கொலை செய்யும் எண்ணங்கள் தோன்றுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றது.

இதனால் பல பெண்கள் உளப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இம் மக்களுக்கு தேவையான உளநலப்பணிகளை மேற்கொள்ளவேண்டிய பொறுப்புக்கள் தமக்கு ஏற்பட்டுள்ளதாக உளநலக் குழுவினர் தெரிவித்தனர்.

(ச-19,5)

### நோர்வே...

அரச தரப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எம். கருணாரட்ண, சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால, பொதுமக்கள் பாதுகாப்புச் செயலாளர் திலக்ரணவீரராஜா மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை இச் சந்திப்பினை முடித்துக் கொண்ட நோர்வேத் தரப்பினர் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு ஹெலிகொப்டர் மூலம் நேரில் விஜயம் செய்தனர்.

(ச-04)

### புனரமைப்புப்...

தேசங்களில் நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவென கடந்த 2 ஆம் திகதி எமது படை இலங்கை வந்தது. அன்றிலிருந்து அமெரிக்க கடற்படையினர் 700 பேர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண மற்றும் புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-08)

### தலைவர் பிரபா...

நடவடிக்கைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர்.

இன்று நடைபெறவுள்ள நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றசன் குழுவினருடனான சந்திப்பு தொடர்பாகவும் மந்திராலோசனை மேற்கொண்டனர்.

அன்ரன் பாலசிங்கம் இருவாரங்களிற்கு வன்னியில் தங்கியிருப்பார். தங்கியிருக்கும் காலப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் அதன் எதிர்கால திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மற்றும் முக்கிய தளபதிகளுடன் விரிவாக ஆலோசனை நடத்துவதுடன் எதிர்கால சமாதான முயற்சிகள் குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே ஊடாக அரசிற்கு தெரியப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றசன் தலைமையிலான குழுவினர் இன்று கிளிநொச்சிக்குச் செல்கின்றனர்.

அரச உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி செல்லும் அவர்கள் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு தலைவர் பிரபா, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். நோர்வேக் குழுவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் உட்பட்ட குழுவினர் அடங்குவர்.

(ச-04)

### சர்வதேச...

தக்க கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாது. சந்திப்பின் பின்னரே பெறுமதியான கருத்துக்களை வெளியிடமுடியும் என்றும் அவர் கூறினார்.

சுனாமி இயற்கை அழிவு எமது தாயகப் பிரதேசங்களையும் எமது தமிழ் மக்களையும் மிகுந்த நெருக்கடி நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. என்றுமில்லாதவாறு பாரிய அழிவையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த அழிவுகளில் இருந்து மீண்டெழ சர்வதேச நாடுகள் பெறுமதியான நல்ல உதவிகளை வழங்கியுள்ளதோடு தொடர்ந்து வழங்கும் முகமாக பரிந்துரைகள் செய்துவருகின்றது. இதற்கு எமது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

ஆனால் இவ் உதவிகள் வடக்கு கிழக்கிற்கு சமமாகப் பங்கிடப்படாமை குறித்து நாம் மிகுந்த கவலையடைகின்றோம் எனத் தெரிவித்தார்.

ஆகவே இது தொடர்பாக இன்று நோர்வே அனுசரணையாளருடன் முக்கிய கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளோம். எமது குறைகளை அவர்களுக்கு தெரியப்படுத்துவோம் எனவும் இதன் மூலம் ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

(ச-04)

### அன்ரன்...

பிற்பகல் 1.30 மணியளவில் கிளிநொச்சியைச் சென்றடைந்த அன்ரன் பாலசிங்கத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ கல்வி கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோருடன் பொறுப்பாளர்கள், போராளிகள் கூடிநின்று வரவேற்றனர்.

(04)


## தவறிவிட்டது

புண்ணியமூர்த்தி தவராசா (வட்டாரம் 3, வேலணை) ஆகிய எனது தேசியஅடையாள அட்டை (782243047V) ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

(C-1028) பு.தவராசா

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் தை மாதம் 09 ஆம் நாள் (22.01.2005) சனிக்கிழமை (இன்று) பிற்பகல் 6.00 மணிமுதல் 8.40 மணிவரையுள்ள (புதிய நேரம்) கர்க்கடக லக்கினம் கூடிய சுபவேளையில்

| எமது புதல்வன் திருநிறைச்செல்வன் | எமது புதல்வி திருநிறைச்செல்வி |
| --- | --- |
| கஜாகரன் [கஜன்] | டினோஷியா [டினோ] |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |



இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

த.முகவரி:-
திரு. திருமதி து.துரைநாயகம்
(முருகன் ரேடர்ஸ், யாழ்ப்பாணம்)
நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

திரு. திருமதி மா.இராஜேஸ்வரன் (ராசா)
இல.50, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[இரு வீட்டார் அழைப்பு]

(9240)

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

## மரண அறிவித்தல்



### செல்லப்பா தெய்வானை

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி முதலாம் ஒழுங்கையை வதிவிடமாகவும்கொண்ட செல்லப்பா தெய்வானை (19.01.2005) புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி நாகமுத்துவின் அன்புமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேதுப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற செல்லப் பாவின் மனைவியாரும், கதிர்காமர் மீனாட்சி, காலஞ்சென்ற சிவகங்கை, காலஞ்சென்ற பாலசிங்கம், காலஞ்சென்ற சுந்தரம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தனுஷ்கோடி, சின்னததம்பி, காலஞ்சென்ற சதாசிவம், முத்தம்மா ஆகியோரின் மைத்துனியும், விமலேஸ்வரி, யோகேந்திரன், அன்னலெட்சுமி, மனோகரன், வரதலெட்சுமி ஆகியோரின் அன்புத்தாயாரும,

நரசிங்கமூர்த்தி ,இந்துராணி, நித்தியானந்தன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மாமியாரும், உமாகாந்தன், உமாராஜேஸ்வரன், ஞானபாலன், அகிலாண்டநாயகி, நவீந்திரன், சசீந்திரன், மஞ்சயன், ஹரிமர்த்தனன், கிருஸ்ணவரதா, ஹரிலோஜீனன், பாமினி, சூசன ஆகியோரின அன்பு பேர்த்தியாரும், விதுசன், மெல்லிசா,சுருதி, பிருந்தா, மஞ்சரி, சத்தியன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரிகைகள் (23-01.2005) ஞாயிறு மதியம் 1.30 மணியளவில் நடைபெற்று மாலை 3.00 மணி அளவில் வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50/3 முதலாம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1027)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்














இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.